சத்திய வேத

# பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு ஆனி மாதம் 18-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 23-ம் இலக்கம்

## மருதமடுத் திருப்பதியிலே காட்சிதரும் பரலோக நாயகி

**இலங்கையில் சத்தியவேத ஆரம்பம்**

சங்கிலி அரசன் யாழ்ப்பாணத்தில் அரசுபுரிந்தகாலத்தில் (1519—1561 கி. பி.) மன்னாரின் ஏழைவாசிகள் கத்தோலிக்க சமயத்தைப் பின்பற்ற ஆரம்பித்தனர். மற்றப்பகுதிகளைக் காட்டிலும் மன்னாரிலே வெகுசீக்கிரத்தில் சத்தியவேதம் பரம்புவதற்கு மன்னாரின் இயற்கை அமைப்பே முக்கியகாரணமாயிருந்தது. தென்இந்தியாவில் அர்ச். பிரான்சிஸ்சவேரியாரின் அயராஉழைப்பினால் கத்தோலிக்கசமயம் மிகவுந் தீவிரமாகப் பரவிவருகிறதென்று கேள்வியுற்ற ஏழைமன்னார் வாசிகள் தாங்களும் சத்தியவேதத்தில் சேரவேண்டுமென்று அவாக் கொண்டனர். ஆகவே, ஞான ஒளி தங்களிடத்திலும் வீசும்படி செய்யவேண்டுமென்று அவர்கள் அர்ச்சியசிஷ்டரை வேண்டிக் கொண்டனர். அம்மகானும் அவர்களுடைய விண்ணப்பத்திற்குச் செவிசாய்த்துத் தம்முடனிருந்த வண. பிரான்சிஸ் சவேரியார் சுவாமியாரை மன்னாருக்கு அனுப்பிவைத்தார். அவர் மன்னாருக்கு வந்ததும் தமது மகத்தானசேவையில் ஊக்கத்துடன் ஈடுபடஆரம்பித்தார். சிறிது காலத்தில் மன்னார் கத்தோலிக்க வேதத்தின் இருப்பிடமாக மாறியது. சத்தியவேதத்தின் ஒளி சூரியகதிர்களைப்போல் மன்னாரின் சுற்றுப்புறங்களிலுள்ள கிராமங்களிலும், மாந்தைஎன்ற ஊரிலும் பரவஆரம்பித்தது. கொடுங்கோலனான சங்கிலி அரசன் இதைக் கேள்வியுற்றதும் அடங்காக் கோபங்கொண்டான். ஆயுதம்அணிந்த 5,000 யுத்தவீரர்களுடன் பரமஏழைகளான கத்தோலிக்கர்மீது பாய்ந்து, அவர்களில் சுமார் 700பேர்களைச் சிறிதும் இரக்கமின்றி வாளுக்கிரையாக்கினான். ஆகவே, ஆண்களும், பெண்களும், சிசுக்களும், யௌவன பிராயமுள்ள வண. பிரான்சிஸ் சவேரியார் சுவாமியாரும் சத்தியமறைக்காகத் தங்களுடைய இரத்தத்தைச் சிந்தினர்.

**செபமாலை இராக்கினியின் சுரூபம்**

இவ்விதம் வேதகுழப்பங்கள் மன்னாரில் நடைபெறும் சமயத்தில், மாந்தையிலுள்ள கத்தோலிக்கர் போர்த்துக்கேயருடைய உதவியின்பேரில் ஒரு பெரிய கத்தோலிக்க தேவாலயத்தைக் கட்டி முடித்தனர். தற்சமயம் மருதமடுவில் எழுந்தருளியிருக்கும் பரிசுத்த செபமாலை இராக்கினியின் அழகியசுரூபம் இந்தத் தேவாலயத்தில் வைக்கப்பட்டிருந்ததெனப் பரம்பரையாகக் கூறப்படுகிறது. இந்த உன்னத பொக்கிஷத்தை மாந்தைக் கத்தோலிக்கர் மிகவும் பூசிதமாகக் காப்பாற்றி அதைத் தங்களுடைய சந்ததியாருக்குச் சுதந்தரப் பொருளாக அளித்தனர். கத்தோலிக்கர் வெகுகாலம் கஷ்டமனுபவித்த பின் அவர்களுக்கு இரட்சணிய காலம் அணுகியது. 1591-ம் ஆண்டிலே போர்த்துக்கேயர் சங்கிலி அரசனுக்கு விரோதமாகப் படையெடுத்து அவனைப் போர்க்களத்தில் வென்றனர். அதே வருடத்தில் செய்துகொள்ளப்பட்ட நல்லூர் உடன்படிக்கையின்படி கத்தோலிக்கர் யாதொரு இடையூறுமில்லாமல் தங்களுடைய சமயத்தைப் பின்பற்ற உரிமை வழங்கப்பட்டனர். அன்றுமுதல் கத்தோலிக்க சமயம் செழித்தோங்க ஆரம்பித்தது. சுமார் ஒன்றரை நூற்றாண்டுகளுக்குப்பின் போர்த்துக்கேயருடைய அதிகாரம் இலங்கையில் குறைந்துவந்தது. அவர்களுக்குப்பின் உலாந்தாக்காரர் அதிகாரம் வகித்தனர். இவர்களுடைய ஆட்சியில் கத்தோலிக்க சமயம் மீண்டும் நசுக்கப்பட்டுவந்தது. பரிசுத்த வேதத்தை இந்தப் பரிதாபகரமான நிலைமையிலிருந்து காப்பாற்றுவதற்குப் பிராமண குலத்தில் உதித்தவரான ஆசாரத்துக்குரிய யோசேவாஸ் சுவாமியார் தன்னந்தனிமையாக இலங்கைக்கு வந்தார். அவர் மன்னார்க் கரையில் ஒரு இந்தியத் தொழிலாளியைப்போல் இறங்கினார். அவருடைய அயரா உழைப்பினால் கத்தோலிக்க சமயம் இலங்கையில் புத்துயிர் பெற்றது.

**சுரூபம் காப்பாற்றப்பட்டது**

உலாந்தாக்காரர் 1669-ம் ஆண்டு மாந்தையைத் தாங்கள் கூடும் ஸ்தலமாக மாற்ற எண்ணினர். நகரவாசிகள் தங்களுடைய புகழ்பெற்ற சுரூபத்தை எவ்விதத்திலும் காப்பாற்றத் தீர்மானித்தனர். இறுதியில் மாந்தையிலுள்ள

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## துன்பப்படும் மௌனதிருச்சபைக்காகச் செபவாரம்வகுத்து திரிகோணமலை மேற்றிராணியாண்டவர் அவர்கள் விடுத்திருக்கும் நிருபம்

யேசுக்கிறீஸ்துநாதரில் எமது அன்பார்ந்த சகோதரர்களே, பிள்ளைகளே!

பரிசுத்தபிதாவாகிய 23-ம்அருளப்ப பாப்பாண்டவர் துன்பப்படும் மௌனதிருச்சபைக்காக விசேஷவிதமாய் மன்றாடும்படி உலகம்எத்திசைக்கும் செய்தி அனுப்பியுள்ளதை நாம்ஏற்கனவே அறிந்திருக்கிறோம். இந்த வேண்டுதலுக் கிணங்கி உலகத்திலுள்ள சகலமேற்றிராசனங்களும் விசுவாசத்துடனும், பக்திவேகத்துடனும் செபத்தில்ஈடுபட்டிருக்கின்றன. இலங்கையிலேயும் பலமேற்றிராசனங்கள் இச்செபதினங்களைக் கடந்ததபசுகாலத்தில் கண்டுகளித்திருக்கின்றன. நமதுமேற்றிராசனத்திலே திருஇருதயஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதத்தையே இத்தீவிர செபவாரத்துக்கென நாம்தெரிந்திருக்கிறோம். இந்த ஆனிமாதக் கடைசிவாரத்தை—அதாவது21-ந்திகதி தொடங்கி 28-ந்திகதி உள்படவுள்ள வாரத்தைப் பரிசுத்தபிதாவின் வேண்டுகோளுக்கிணங்கித் துன்பப்படும் மௌனதிருச்சபைக்காகப் பிரார்த்திப்பதில் நமதுஇருதயங்களைப் பூரணமனதுடன் காணிக்கையாக்குவோமாக!

இந்தநிருபத்துடன் மௌன திருச்சபையைப்பற்றிய ஓர்பத்திரத்தையும் விடுக்கிறோம். வண. கட்டளைக்குருமாரும், ஸ்தாபனங்களின் முகாமைக்காரரும் தங்களதுமந்தைக்கு இவற்றைப் படித்து விளக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். ஞாயிறுவாரத்திலே பூசைப்பலி வேளைகளிலாவது அல்லது இச்செபவாரத்திலாவது இந்தஉபதேசத்தைச் செய்யலாம்.

யேசுக்கிறீஸ்துநாதரில் நமது அருமையான மக்களே, உங்களிடம் நாம் கேட்பது: நீங்கள் யாபேரும் முழுஇருதயத்துடனும், பூரண மனத்துடனும் இந்தத் தீவிர செபச்செண்டில் பங்குபற்ற வேண்டுமென்பதுதான். பரிசுத்த பிதாவாகிய பாப்பாண்டவர் தாமே உங்களிடம் இதைக்கேட்கிறார். கொடூரமும், பசாசின் வஞ்சனைநிறைந்த முரட்டுத்தனமுமான இந்தவேதகலாபனையிலே உபத்திரவப்படும் நமதுசகோதரராகிய கோடிக்கணக்கான கத்தோலிக்கமக்களுக்காக மன்றாடுங்கள். நம்முடையநாயகன் யேசுக்கிறீஸ்துவின் பிரதிநிதியும், மேய்ப்பனுமாகிய பரிசுத்தபாப்பாண்டவர் தம்மிடமிருந்து பிரிக்கப்பட்டு, தங்கள் விசுவாசநன்கொடையை இழந்துபோகும் தருவாயிலிருக்கும் ஆயிரக்கணக்கான பிள்ளைகளுக்காக மன்றாடும்படியாய்க் கேட்கிறார். இன்னும் இவர்கள் தத்தளிப்பில்லாது விசுவாசத்தில் என்றென்றைக்கும் ஸ்திரமாயிருக்கவும், இவர்களது விடுதலைகாலமும், முன்னிருந்த சுயாதீனமும் இவர்களுக்கு அதிசீக்கிரம் திரும்பிவருமாறும் பிரார்த்தியுங்களென்று வற்புறுத்துகிறார்.

இந்தநாட்களிலே இச்சகல வேண்டுதல்களையும் திரு இருதய ஆண்டவர்மூலமே கேட்கும்படி நாம் உங்களைத் தூண்டிவிடுகிறோம். ஏனெனில், துன்பப்படும் மௌனதிருச்சபைக்காக நாம்மன்றாடும்பொழுது: ஆராதனைக்குரிய இருதய ஆண்டவரிடம் — தம்மிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறவர்களுக்கு இரட்சணியமும், எங்கள்சமாதானமும், இணக்கமும், நீதிக்கும்சிநேகத்துக்கும் உறைவிடமும், சிநேக அக்கினி சுவாலித்தெரியுஞ் சூளையுமாகிய யேசுவின் திவ்வியஇருதயத்திடம்போகாமல் வேறுயாரிடம் போவோம்? இவரே உபத்திரவப்படுத்துகிற கல்நெஞ்சருடையமனதை மாற்றக்கூடிய வல்லபர்.

ஆனிமாதம் 21-ந்திகதி தொடங்கி 28-ந்திகதிவரைக்கும் தினசரி பூசைகண்டு துன்பப்படும் மௌனதிருச்சபைக்காக ஒப்புக்கொடுக்குமாறு விசுவாசிகளுக்கு விசேஷதூண்டுதல் செய்கிறோம். குருப்பிரசாதிகள்: இவ்வாரப் பூசைவேளைகளில் "கஷ்டப்படுத்தித் துன்பம் விளைவிக்கிறவர்களுக்காக" 11-ம்செபத்தைக் கட்டளைச்செபமாகச் சொல்வார்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச். சூசையப்பரின் அப்போஸ்தலர் அந்திரே பிறதர்

(முன் தொடர்ச்சி)

அர்ச். சூசையப்பர் தமது உண்மையான பக்தருக்குத் தமதுசுவீகாரப் புத்திரரான யேசுவின் நேசவரம், ஆத்துமசரீர பரிசுத்ததனவரம், உள்ளரங்க சீவியவரம், பாக்கியமான மரணவரம் மாத்திரமல்லவே, தமது திவ்விய பத்தினியான தேவதாயாரின் பத்திவரமும் அடைந்து பாலிப்பவராயிருப்ப, அந்தப் பத்திவரத்தைத் தாம் விசேஷ விதமாகத் தெரிந்துகொண்டு, பரிபாலித்துவந்த தமது அன்புமிக்க அப்போஸ்தலரான அந்திரேபிறதருக்கு அடைந்தருளாதிருப்பாரா? இல்லை இல்லை. தமது சின்னஞ்சிறு பராயந் தொட்டே அவர் தேவதாயாரைப் பக்திசெய்துவரச் சூசையப்பர் அவருக்கு அருள் பெற்றளித்தருளினார் என்பதற்கு அணுப்பிரமாணமும் ஐயமில்லை.

தமக்கு விசேஷ அன்புகாட்டிவந்தவளான தம்மைப்பெற்ற தமது அன்னையின்மடியிலிருக்கும்போதே—'அம்மா' 'ஐயா' என்று மழலைமொழியத் தொடங்கியபோதே, "யேசுவே, மரியாயே, சூசையப்பரே" என்றுநிரம்பா மொழியாய் உச்சரிக்கவும் பயிற்றப்படலானார். தமது பூலோக அன்னையின் பக்கலிலிருந்து அவளது செபமாலையைத் தாமும் பிடித்துத் தமது பரலோக அன்னையை வாழ்த்தி மன்றாடவுங் கற்றுக்கொண்டனர். கைத்தொழிலாளியாக உலகில் வாழ்ந்துவந்த காலத்திலும்பார்க்கப் பரித்தியாகியாக மடத்தில் சீவித்துவந்த காலத்திலேயே அவர் தேவதாயார் மேற்கொண்டபக்தி அதிவளர்ச்சியும், முதிர்ச்சியும் அடைவதாயிற்று. தேகப்பிரயாசையான வேலை மேலீட்டால் இளைத்துக்களைத்திருக்கும் வேளை செபமாலைசெபிப்பது அவருக்கு இளைப்பாற்றியாகவிருக்கும். சூசையப்பர் ஆலயம் ஓர் குன்றிலே கட்டப்பெற்றிருக்கின்றமையால் எவராயினுஞ் சரி, பலபடியேறியே அதற்குட் பிரவேசித்தல்வேண்டும். நம் பரித்தியாகி பிரியதத்த மந்திரத்தை ஓதிக்கொண்டு முழந்தாளால் நடந்தேறிச் செல்வதுமுண்டு. செபமாலை செபிக்கும்போது ஒவ்வொரு பத்துமணிச் செபத்தையும் ஓர் பாவி மனந்திரும்புதல், ஓர் நோயாளி குணப்படுதல் போலும் ஒவ்வோர் கருத்துக்காக ஒப்புக்கொடுத்துவரும் வழக்கமுடையவராக இருந்துவரலானார். திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் எங்கள் நாயகியே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் என்பதுபோலும் வேண்டுதல் சொல்லித் தம்மைப்போலவே தமது சொல்கேட்கத்தக்க பிறரும் மன்றாடி வரும்படி அவர்களைத் தூண்டிவருவார். அதிமனப்பற்றுதலாக அவர் சாதனை செய்துவந்த பக்தி வியாகுலமாதா பக்தியாகும்.

தேவதாயார் மூலமாகவே தேவ இரட்சகரிடஞ் செல்லவேண்டுமென்று தேவகைத்தாதையிடம்நின்றே கற்றுக்கொண்ட அந்திரேபிறதர் அந்தத்தாயாரைப் பிள்ளைக்குரிய நேசநம்பிக்கையோடு பிரமாணிக்கந்தளராது சேவித்து, தேகாத்தும பரிசுத்தமாகச் சீவித்துவரப் பிரயாசித்து வந்தமையினாலே அந்தப் பரமதாயாரும் அவரை மாதா அடைவான நேசத்துடனே நிதமும் பரிபாலித்துத் தமது மகாவிரத்த பத்தாவின்மேல் விசேஷ பக்திகூரவும், அவரது அடைக்கல ஆதரவை அடைந்து சுகிக்கவும், அவர் நாமத்தை முன்னிட்டு ஆத்தும சரீர ஆரோக்கியங்கள் அற்புதவிதமாய் அருளவும், அவருடைய பக்தியைத் தேசாதேசமெங்கும் மேன்மேலுஞ் சொலிப்பிக்கவும் மகத்தான ஞானஒளியையும் தேவஅருளையும் அவருக்கு ஔதாரியமாக அடைந்தருளினார்.

தமது தூய சீவியப்பங்காளரான சூசையப்பரின் சற்பாத்திர தொண்டருடைய ஆத்துமநேத்திரத்துக்குப்புலப்படும்ஞானவெளிச்சத்தால்மாத்திரமோ, தேக நேத்திரத்தை மகிழ்விக்கும் அற்புத வெளிச்சத்தாலும் அவர் சூழப்படவும் தருணாதருணங்களில் தமதுசுதன் அநுக்கிரகிக்கவுஞ் செய்தருளினார் எனவும் நம்பவேண்டியிருக்கின்றது. ஓர் நாளிரவு ஆலயப்பலிபீடத்துக்குப் பின்புறமாக அவர் முழங்காலில் வீழ்ந்து செபித்துக்கொண்டிருக்கையிலே, சடுதியிலே அவரிருந்த ஆலயப்பாகம் பிரபையான வெளிச்சத்தினாலே நிரப்பப்பட்டது. ஓர்நாட் சாயரட்சை ஆலய மத்தியிலே சூசைமாமுனிவர் சுரூபத்திற்குமுன்னே அவர் சாஷ்டாங்கமாக விழுந்து செபயோகஞ் சாதித்திருக்கும் வேளை, சுரூபந் திடீரெனத் தேசோமயமாகிப் பிரகாசமுகிலாற் தாங்கப்பட்டு அவருக்கு எதிர்கொண்டு வருவதாகக் காணப்பட்டது.

1931-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 28-ந் திகதி இரவு அந்திரேபிறதர் சயனிக்க முஸ்திப்பாக இருக்கும்பொழுது தேவதாயார் தாமே திவ்வியகுழந்தை யேசுவைத் திருக்கரத்தில் ஏந்திய பிரகாரம் அவரைநோக்கி எழுந்தருளிவரக்கண்டு அன்பும், அதிசயமும், ஆனந்தமும் மேலிட்டு "என் தாயாரே என் நல்ல தாயாரே" என்று அநேக முறை ஓலமிடலாயினார். மரணப்படுக்கையிற் கிடந்தபோது தேவதாயாரைத் தமது மதுரதாயாரென அழைத்து மனஉருக்கமாக மன்றாடிக்கொண்டனர்.

மகானுபாவரான நந்துறவி அந்திரே பிறதர் காலவட்டத்திலே அனுட்டித்து வந்தவையான மேற்காட்டிய நானாவித பத்தியினாலே சிறப்பிக்கப்பட்டுத் திகழ்ந்த அவரது ஞானச்சீவியத்தின் நீர்மையைச் சற்றேஆராய்ந்து பார்ப்போமாக.

மனிதன்எவனும் நித்தியபரகதிப் பாக்கியத்தை அநந்தகாலம் சுகித்து வாழவே சிருட்டிக்கப்பட்டிருக்கின்றான். அந்தப் பரமபாக்கியம் திரியேக சர்வேசுரனை முகமுகமாய்த் தரிசிப்பதிலேயே அடங்கியுள்ளது. இது மனித சுபாவத்துக்கு முற்றும்எட்டாத பாக்கியமாதலால், அதனைஅடைந்து அனுபவிக்க அவன் சுபாவத்துக்கு அதீதமான சீவியத்துக்கு உயர்த்தப்படல் இன்றியமையாத அவசியம். அத்தகைய ஆவசியகமானதாகிய அச்சீவியத்துக்கு அவனை உயர்த்திவிடுவது யாது? தேவசுபாவத்திலேயே, தேவனது சீவியத்திலேயே அவனைப் பங்குபற்றச் செய்வதாகிய தேவவரப்பிரசாதமேயன்றி வேறெதுவுமன்று. ஆதலினாலேயே தைவீகஞானிகள் "சுபாவத்துக்கு மேலானசீவியமானது நம்மிலே வாசமாயிருக்கும்திவ்வியஇஸ்பிரீத்துச் சாந்துவினாலே யேசுக்கிறீஸ்துநாதரின் பெறுபேறுகளின் நிமித்தமாகநமக்கு அருளப்படும் தெய்வீகசீவியத்தின் ஓர் பங்குதானே" என்று வரைவிலக்கணம் அமைத்துக் கூறுகின்றார்கள்.

கிறீஸ்துவன்என்னும் நாமத்துக்குப் பாத்திரமாயிருப்பவன் யார்? யேசுக்கிறீஸ்துநாதரைஒப்ப உள்ளரங்க சீவியத்திலும், வெளியரங்க சீவியத்திலும் ஒழுகும்படிசெய்துவரும் அக்கிறீஸ்துநாதருடைய இஸ்பிரீத்துவானவரால் ஆட்கொள்ளப்பட்டிருப்பவனேயாம். அந்த இஸ்பிரீத்துவானவரே பிதாவானவரோடும், சுதனானவரோடும் அவனிடம் வாசமாயிருந்து யேசுக்கிறீஸ்துநாதரது குணங்களையும், உணர்ச்சிகளையும், புண்ணியங்களையும் அவனுக்கு ஏவி ஊட்டியருளுகின்றார்." (Father Olier, "Catechism for an Interior Life" C. III.)

இதுகாரணம்பற்றியே பாப்பரசராகிய அர்ச். சிங்கராயர் "ஓ! கிறீஸ்துவனே, எத்தகைய மகத்துவத்தை நீ கொண்டிருக்கின்றனையென்று தெளிந்துகொள்வாயாக. தெய்வீகசுபாவத்திலே பங்குபற்றியுள்ள நீ உனது முன்னையகேடுகெட்டதனத்துக்குத் திரும்பி விடாதே" என்று வியந்தும், எச்சரித்தும் நன்மதிபுகட்டியிருக்கின்றார். (Sermones, XXI, 3. P. L. Liv. 195)

(தொடரும்)

# கத்தோலிக்க திருச்சபையும் கம்யூனிஸமும்

(திரு. ஜே. வி. செபஸ்ரியன் அவர்கள்)

போகுமிடமெல்லாம் முகத்தில் கரியைப்பூசிக்கொள்ளும் கம்யூனிஸ்தர்கள் சூடுசொரணை சிறிதுமேஇல்லாது செல்லரித்துப்போன தங்கள்கொள்கையைப் பொதுமக்களிடையே பரப்பி அவர்களை அடிமைகொள்ளும் கெடுபுத்தியைமறைத்துத் தேசாபிமானிகளாய், முற்போக்குவாதிகளாய் வேஷம்போடுவது நமக்குஆத்திரத்தையல்ல, அனுதாபத்தையே உண்டுபண்ணுகிறது.

விஷநாகத்துக்கு "நல்லபாம்பு" என்று பெயர்இருப்பதுபோல், தேசப்பற்றுஎன்ற சொல்லுக்குப் பொருளே தெரியாத மஸ்கோமங்கைகளான இப்பகல்வேஷதாரிகளின் பிரசார ஏட்டுக்குப்பெயர் "தேசாபிமானி". உலகில் எந்தஒருநாட்டிலாவது கம்யூனிஸ்தார்கள் பூரண விசுவாசத்துடன் நடந்துகொண்டார்கள் என்பதற்குச் சான்றேகிடையாது. உண்மை இவ்வாறிருக்க, தங்களின் துரோகத்தனத்தைத் திரைபோட்டுமறைத்து, அடுத்தவர்மீது அபத்தங்கக்கி, அபாண்டப் பழி சுமத்துவதால் உண்மையை அழித்துவிடமுடியுமா?

சிலதினங்களுக்குமுன் வெளிவந்த அவர்களின்பிரசாரஏடான "தேசாபிமானி"யில், கத்தோலிக்க திருச்சபை மீது வசைப்புராணம்பாடி ஒருகட்டுரை வெளியிடப்பட்டிருந்தது. தொகுத்தவர்பெயர் "அந்தோனி"யாம். கட்டுரையின்களங்கம் பெயரையும் களங்கப்படுத்திவிட்டது. இப்படி வேண்டுமென்றே அபத்தங்கக்கித் திருச்சபைக்குக் களங்கம்கற்பிக்க முன்வந்த "மஸ்கோ கைக்கூலி"களின் திமிரை என்னென்பது! மனிதன் தன்எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு சேமிக்க விரும்புகிறான். சேமிப்பதை எப்போதும் எதிர்ப்பவர்கள் கம்யூனிஸ்தர்கள். யாராவது சேமித்துவைத்திருப்பதை அவர்கள்கண்டால் அவர்கள்நாக்கில் எச்சில்ஊறும். மூளையுள்ளவன் இப்படிச் சேமித்துவைப்பது முட்டாள்தனத்தின் பிரதிபிம்பங்களான இப்பிரகிருதிகளுக்குப்பொறுக்கமுடியவில்லை. உழைப்பாளி தன்உழைப்பைத் தன்னுடையகுடும்பத்திற்குமாத்திரம் உபயோகப் படுத்துவானேயாயின் இந்தச்சோம்பேறிக்கும்பல் எப்படி வாழ்வது? ஆகவே, தங்கள்உல்லாச வாழ்வுக்காகவேண்டி இந்தஉழைப்பாளிகள்கும்பலைத் தங்கள் வலையில்வீழ்த்தப் பகீரதப்பிரயத்தனம் செய்கின்றனர். காலையிலிருந்து மாலைவரை உழைப்பையன்றி வேறொன்றையுமே அறியாத பாட்டாளி வர்க்கத்திற்குப் "பூலோகசுவர்க்கம்" எனும் கற்பனைஉலகைக்காட்டி ஏமாற்றுகின்றனர் இந்தக் கம்யூனிஸ்தர்கள். நல்லகத்தோலிக்கர் எப்போதும் இவர்களது பிரசாரங்களில் மயங்குவதில்லை. கத்தோலிக்கரைத் தங்கள்வலையில் வீழ்த்துவதில் தோல்விகண்ட கம்யூனிஸ்தர்கள் அவர்களிடையே பிளவைஉண்டுபண்ணி வேடிக்கைபார்க்க விரும்பித் திருச்சபையின்நிர்வாகத்திலே குறைகண்டுபிடிக்க முனைகின்றனர். ஆனால்,கத்தோலிக்கர் ஏமாளிகளல்ல.

திருச்சபையின்மக்கள் இதயமுள்ளவர்கள். தங்கள்இரட்சகர் கிறிஸ்துபெருமானின் போதனையைத் தவறாது கடைப்பிடிப்பவர்கள். திருச்சபை அதிகாரிகளும் மனிதர்கள். அவர்களும் நமக்காகவாழவேண்டும்என்ற பரந்தநோக்கத்தையுடையவர்கள். இவர்களின்நோக்கம் களங்கமற்றது. ஆண்டவர் இவர்களுடையநோக்கத்தை ஆசீர்வதிக்கும் அதேநேரத்தில் திருச்சபையையும் இக்கட்டுஇடைஞ்சல்களிலிருந்து காப்பாற்றுகிறார். இதைப் புரிந்துகொள்ளும் அறிவு இல்லையே இந்த நாஸ்திகர்களுக்கு. மக்கள்அரசாங்கம்என்று சொல்லிக்கொண்டு மக்களைவருத்திக் கொடுமைப்படுத்திக் கடுமையான வரிகள்விதித்து அக்கிரமமானமுறையில் ஆட்சிபுரிகின்றனவே கம்யூனிஸ்ட் அரசாங்கங்கள். இப்படித் திருச்சபை மக்களிடமிருந்து பணத்தைப் பறித்ததுண்டா? பாட்டாளிகளை இரட்சிக்கவே பாடுபடுகிறோமெனப் பறைசாற்றிக்கொண்டு சந்தா, நிதிமுதலியன பலவழிகளாலும் அவர்களின்பணத்தைப் பறித்துச் செல்வத்தைக்குவிக்கிறதே பொதுவுடைமைக் கட்சி. இப்படிக் கத்தோலிக்கபொதுமக்களை ஏமாற்றித் திருச்சபை பணம் பறித்ததாக ஆதாரமுண்டா? கத்தோலிக்கதிருச்சபையைக் கம்யூனிஸ்தநாடு அல்லாத எந்தஒருநாடும் கம்யூனிஸ்தர் அல்லாத எந்த ஒரு ஆளும் இன்று வெறுப்பதில்லை. கம்யூனிஸத்தையோ சர்வஉலகமும் இன்று வெறுத்தொதுக்குகிறது. கம்யூனிஸ்தர்கள் பித்தலாட்டத்தனத்தில் பேர்போனவர்கள்என்பதை மக்கள்உணரத் தொடங்கிவிட்டார்கள். கம்யூனிஸ்தர்கள் நேற்றுமுளைத்த காளான்கள். அவர்கள் பிறப்பதற்குமுன்னரே திருச்சபை இருந்தது.

இலங்கைஎங்கனுமே திருச்சபை சிறப்பானமுறையில் தொண்டாற்றிவந்ததை — வருவதைநாடறியும், உலகமறியும் திருச்சபைஅதிகாரிகள்தங்களை ஒறுத்துப் பொதுநலசேவா ஆர்வத்தால் தூண்டப்பெற்று நாட்டுமக்களை நல்லவர்களாக்கும்பணியில் ஈடுபட்டுள்ளார்கள்என்பதை அறிவுள்ளமனிதனால் மாத்திரமே புரிந்துகொள்ள முடியும். எத்தனைபாடசாலைகள், அனாதைமடங்கள், முதியோர்விடுதிகள், வைத்தியசாலைகள். இவற்றால்பலனடைவது நாட்டுமக்கள் எல்லோருந்தானே. இப்படித்திருச்சபை தன்வருமானத்தைச் செலவிடுகின்றது. இதைஉணராது ஊளையிடும் குள்ளநரிகள் தங்கள் வருமானத்தை— தங்கள் கட்சியின் செல்வத்தை எந்தவகையில் பொதுமக்களுக்காகச் செலவிட்டிருக்கின்றனர் என்பதைக் கூறமுடியுமா? சாதி, மத, இனபேதமின்றிச் சகலமக்களும்பலனடையும்வண்ணம் திருச்சபையைப் போல் கம்யூனிஸ்தகட்சி தன்வருமானத்தைச் செலவழித்துள்ளதென்பதை நிரூபிக்கமுடியுமா? முடியாது, முடியவேமுடியாது. கையாலாகாத கோழைகளுக்கு வாய்வீச்சு என்னத்திற்கு?

திருச்சபை தங்களை மாத்திரம் தாக்குவதாக இவர்கள்ஓலமிடுகிறார்களே. ஏன் திருச்சபை தங்களைத் தாக்குகிறதென்று காரணமறிய எப்போதாவது இக்கம்மிகள் முயற்சித்ததுண்டா? எத்தனைகாலத்திற்குத்தான் இவர்களது தகிடுதத்தத்தைச் சகித்துக் கொண்டிருப்பது? ஏழைகளையும், ஏமாளிகளையும் ஏய்த்துவாழ்வதையே நோக்கமாகக் கொண்டிருக்கும்வரை எமதுதாக்குதலிலிருந்து இவர்கள் தப்பமுடியாது. தாக்குவதோடு நிற்க

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச். தொன் பொஸ்கோவின் புதிய ஆலயம்

ரோமைநகரிலே புதிய அப்பியன்பகுதியில் 3,510 சதுரமீற்றர் விஸ்தீரணமான இடத்திலே நவமாகக் கட்டியெழுப்பப்பெற்றுள்ள மாட்சிவாய்ந்த ஆலயம் ஒன்று சென்ற வைகாசிமாதம் 2-ந் திகதியன்று "இளைஞர்களின் தந்தையும், ஆசிரியரு"மான அர்ச். தொன்பொஸ்கோவின் நாமத்தினலே கருதினல் மாசெல்லா ஆண்டவரால் அபிஷேகஞ் செய்யப்படலாயிற்று. தொன் பொஸ்கோவின் முதலாவது ரோமாபுரித் தரிசனையின் 100-ம் ஆண்டு நிறைவையும், 1934-ம் ஆண்டு அவர் அர்ச்சியசிட்டபட்டம்சூடிய 25-ம் ஆண்டு நிறைவு விழாவையுமே இந்த அபிஷேக வைபவம் ஞாபகப்படுத்தியது. அவரின் புனித அஸ்திகளைக் கொண்ட பேழையானது இந்த அபிஷேக வைபவத்தின்போது தூறின்நகர் மகாதேவாலயத்திலிருந்து ரோமாபுரிக்குக்கொண்டு போகப்பட்டு இப்புதிய ஆலயத்தில் பூச்சியமாக ஸ்தாபித்து வணங்கப்பட்டமையும் இந்த வைபவத்தைப் பெரிதும் பரிமளிக்கச் செய்வதாயிற்று. ஆலய அபிஷேகத்தின்போது இந்த ஆலயத்தினுள் அடங்கியுள்ள பத்துச் சிற்றாலயங்களினதும் அழகிய பலிபீடங்களை மற்றும் பத்து மேற்றிராணிமார் ஏககாலத்தில் அபிஷேகஞ்செய்தார்கள். "தொன்பொஸ்கோ குவாட்டர்" என அழைக்கப்படுவதும், சரித்திரப்பிரசித்திபெற்ற அப்பியன் பாதைக்குச் சற்று எட்டத்தில் அமைந்துள்ளதுமான ஓர் பகுதியிலே இந்த ஆலயம் நிறுவிநிற்கின்றது. இதன் டோமானது ரோமாபுரியிலே அர்ச். பேதுரு வானவர் மகாதேவாலய டோமுக்குப்பின் இரண்டாவது மிகப்பிரமாண்டமானதாய்த் திகழ்கின்றது இந்தஆலயத்தைக் கட்டியெழுப்புவதிலே :0 கம்பெனிகளைச் சேர்ந்தவர்களும், 40 சித்திரவிற்பன்னர்களும் ஆறுவருடகாலம் ஈடுபட்டுவந்திருக்கிருர்கள்.

—*—

## பாப்பரசரும் காலஞ்சென்ற மந்திரியாரும்

சமீபகாலம்வரை அமெரிக்க வெளிநாட்டுமந்திரியாக விளங்கியிருந்து சமீபத்திலே காலஞ்சென்ற திரு. ஜோண் டல்லஸ் அவர்களின் மரணத்தையிட்டு அருளப்ப பாப்பரசர் அமெரிக்க ஜனதிபதிக்குஅனுப்பிய அனுதாபத்தந்தியிலே "திரு ஜோண்டல்லஸ் அவர்களின் தன்னலமற்ற கடமைப்பற்றும், உலகப் பிரச்சினைகளை நீதியாகத் தீர்ப்பதிலே அவர் எடுத்துக்கொண்ட அயரா முயற்சிகளும் நல்மனமுடைய மக்களெல்லோரதும் பாராட்டுதலைப் பெற்றுள்ளன" என்று தெரிவித்துள்ளார். மேலும் அன்று திங்கட்கிழமை ரோமாபுரியில் நிகழ்ந்த வைபவம்ஒன்றிலே அமெரிக்க வெளிநாட்டுமந்திரி காலஞ்சென்றதையிட்டுத் தமக்குண்டான கவலையைப் பாப்பரசர் தெரிவித்து, அவரை ஓர்மகாபுருஷரென வர்ணித்து, "துக்கம்நிறைந்த இந்த வேளையிலே அவரதுயேசுசபைக்குருமகனேடு தாமும் துயரப்படுவதாகத் தெரிவித்துக்கொண்டார்." திரு. ஜோண் டல்லஸ் அவர்கள் ஓர் கத்தோலிக்கர் அல்லாத போதிலும், அவருக்குக் கத்தோலிக்க வேதவிசுவாச வரப்பிரசாதம் அருளப்படாதபோதிலும் யேசுசபையைச்சேர்ந்த ஓர்குரவரான அவருடைய புதல்வருக்கு அந்த வரப்பிரசாதம் அருளப்பட்டுள்ளதைக் கத்தோலிக்கர் ஒவ்வொருவரும் நன்றியறிதலுடன் ஞாபகத்திற் கொள்ளவேண்டுமெனக் கத்தோலிக்க பத்திரிகைஒன்று எழுதியிருக்கின்றது.

---

## பெல்ஜிய இளவரசரின் திருமணம்

பெல்ஜியதேச பட்டத்துக் குமாரனுன அல்பேட் இளவரசரின் திரும்ணம் முன்சொன்னவாறு வத்திக்கானில் அல்ல, பெல்ஜியத்தின் தலைப்பட்டணமாகிய பிறசெல்ஸ்நகரிலே வைதிக, லௌகிக வைபவங்களுடன் நடந்தேறவிருப்பதாகச்சமாச்சாரம் எட்டியிருக்கிறது. அல்பேட் இளவரசரினதும், பவொலா றுவ்லோஎன்ற இத்தாலிய இளவரசியினதும் திருமணத்தை வத்திக்கானிலே வருகிற ஆடிமாதம் 1-ந் திகதியன்று பாப்பரசர் நிறைவேற்றிவைக்க வேண்டுமென்று முன்னர் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. ஆனல்,பெல்ஜியத்திலே பெரும் ஆட்சேபனைகளை அது உண்டுபண்ணியதால் அங்குதானே திருமணம் நடந்தேறும். பாப்பரசரது சொந்த வேண்டுகோளின் பேரிலேயே இந்த மாற்றஞ் செய்யப்படலாயிற்று. திருமணத்தை நிறைவேற்றுவதற்குப்பதில் பாப்பரசர் வேருன வைபவம் ஒன்றிலே புதிய தம்பதிகளுக்குத் தமது ஆசீர்வாதம் அருளவிருக்கின்ருர்.

## கம்யூனிஸ்தர்கள் வெற்றிகொள்வரா ?

தீபேத்திய சுதந்திர கலகக்காரர் நீடிய போராட்டத்தின் பின் சீனக் கம்யூனிஸ்தர்களை வெற்றி கொள்வார்களென்று முன்னர் தீபேத்தின் எல்லைப்புறத்திலே ஓர் மிஷனரியாய் இருந்தவரும், சுவிற்சர்லாந்திலே அர்ச். பேர்ணட்டின் ஆச்சிரமத்தைச்சேர்ந்த ஓர் சுவிஸ் சாதியினருமான வண. அல்போன்ஸ் சாவியோஸ் சுவாமியார் தெரிவிக்கின்ருர். தற்போது தேசிய சீனவின் தலையிடமாகிய போர்மோசாதீவில் தொண்டாற்றிவருகின்றஇவர் 1947-ம் ஆண்டுமுதல் 1952-ம் ஆண்டுவரை தீபேத்திய மக்களிடையே சஞ்சரித்திருந்தார். "தீபேத்திய சுதந்திர கலகக்காரர் சட்டமுறைப்படியுன்னன்என்ற சீன மாகாணத்தில் இருந்துவந்தனர். ஆனல், உண்மையாகத் தீபேத்திய சிற்றரசர்களே ஆட்சிநடத்திவந்தார்கள்; பொதுவாகஇவர்கள் லாசாநகர தீபேத்தியஅரசாங்கத்திற்கு உட்படாது சுதந்திரமாயும், ஓர் காலத்தில் சீனவின் அங்கீகாரத்தைப் பெற்றவர்களாயும் இருந்துவந்தார்கள்; இந்த அரசியற்புரட்சிக்கலகத்துக்கு நெடுங்காலமாகத் தயார்செய்யப்பட்டு வந்தது; முன்னுயத்தமாய் உள்ளூர்க் கலகங்கள் நடைபெற்று வந்தன; கம்யூனிஸ்த ஆக்கிரமிப்புமுதல் இந்தக்கலகங்கள் உள்ளபடி ஒருபோதுமே நிற்கவில்லை; போராயுதங்களையும், படைகளையும் மலைபோலத்தான் கொண்டுவந்து சரித்தபோதிலும் கலகத்தை அடக்குவது கம்யூனிஸ்தர்களுக்குப் பெருங்கஷ்டமாகவேயிருக்கும்; இவர்கள் மத்தியதானங்களைக் கைப்பற்றிக்கொண்டிருக்கலாம்; ஆனல், தலாய்லாமாவே இடையிற்சென்று ஏதும் நடுப்போக்கினுலன்றி மற்றப்படி சுதந்திரத்திற்காகப் போராடுகிறவர்கள் இருந்துவரும் அணுகமுடியாத மலைகளிலும், அகன்றபள்ளத்தாக்குகளிலும் அவர்களைக் கம்யூனிஸ்தர்கள் அடக்குவதில் வெற்றிகாணமாட்டார்கள்; ஹங்கேரியிற்போன்று பிரமாண்டமான அடக்குமுறையை இங்கே கையாளமுடியாது"என்று வண. அல்போன்ஸ் சாவியோஸ் சுவாமியார் கூறுகின்ருர்.

# சிம்மாசனத்தின் பக்கமாக விவசாயிகளான சகோதரர்கள்

இத்தாலி முழுவதிலுமுள்ள சிறிய கமங்களைச்சேர்ந்த சுமார் 3,500 கிராம விவசாயிகள் சில தினங்களின்முன் வத்திக்கான் மாளிகைசென்று பாப்பரசரின் பேட்டிபெற்று, அவருக்குப் பல அன்பளிப்புகளைச் சமர்ப்பித்தார்கள். அவற்றிலே உள்ளூரில் சுடப்பட்ட ரொட்டியும் அடங்கியிருந்தது. பிந்த அதைப் பாப்பரசர் தமது வழமையான உணவுகளுடன் உண்டுகளிக்கலாயினர். பேட்டியின்போது அவருடைய சிம்மாசனத்துக்குச் சமீபமாகக் கண்ணியமான ஆசனங்களிலே விவசாயிகள் மூவர் உட்கார்ந்திருந்தனர். இவர்கள் மூவரும் அவருடைய சகோதரர்களான அல்பிறெதோ ரொங்கல்லி, சவேரியோ ரொங்கல்லி, ஜியுசெப்பி ரொங்கல்லி என்பவர்களே. பாப்பரசர்பிறந்த சொத்தோ இல் மொந்தே என்ற குக்கிராமத்தில் இன்றுமேஇவர்கள் விவசாயஞ்செய்து வருகின்ருர்கள். "உங்கள்பிரசன்னமானது நல்ல ரொட்டியினதும், நமக்கு அருமையாயுள்ள பொருட்களினதும் பரிமளம்போன்று இருக்கின்றது" என்று தங்கள் சகோதரர் சொன்னபோது அவர்கள் மூவரும் கருத்தாக அதனைக் கேட்டுநின்ருர்கள். "பூமியை நேசியுங்கள்; வேலைகடுமைதான்; சிலவேளைகளில் பிரதிபலன் அற்பம்; ஆனல், நல்ல பூமியிலும், வயல்களிலுமே அபாயகரமான லோகாயதத்திலிருந்து தப்பி நிச்சயமான அடைக்கலத்தைக் கண்டுகொள்வீர்கள்" என்று பாப்பரசர் கூறியபோது எல்லோரும் ஆர்ப்பரித்து அவரை வாழ்த்தினுர்கள்.

—*—

# அரசதம்பதிகளின் வத்திக்கான் தரிசனை

அருளப்ப பாப்பரசர் அன்று வெள்ளிக்கிழமை கிறீஸ்நாட்டின் போல் அரசரையும், பிறெடெறிக்கா அரசியையும் வத்திக்கான் மாளிகையில் வரவேற்று அதிகாரபூர்வமாகப் பேட்டியருளலாயினர். 1439-ம் ஆண்டுக்குப்பின் கிரேக்கநாட்டின் அரசர்ஒருவர் வத்திக்கானுக்கு விஜயஞ்செய்திருப்பது இதுவே முதன்முறையாகும். அப்போது கடைசிமுறையாக வத்திக்கானுக்கு விஜயஞ்செய்தவர் 8-வது ஜோண் பலாயியோ லோகுஸ் சக்கிரவர்த்தியே. இவர் "உலகமுழுமையும் குடிக்கணக்கு எழுதப்பட வேண்டும்" என்று கட்டளைபிறப்பித்த செசார்அகுஸ்துஸ் சக்கிரவர்த்தியின் நேர்பரம்பரையில் உதித்தவர்களில் ஒருவர். அரசதம்பதிகளுக்குப் பேட்டியளித்துப் பிரான்ஸியபாஷையில் பேசிய பாப்பரசர் கிரேக்கநாட்டின்மட்டிலே மேற்கு உலகத்துக்குள்ள மாபெருங் கடமைப்பாட்டினை ஞாபகத்திற்குக் கொணர்ந்து, அத்தன்மாஷை அடைந்துள்ள பெருமையையும், பிளாற்றோ, அரிஸ்ரோட்டில் முதலாம் கிரேக்க ஞானிகளின் பெருமையையும், ஆதிகாலத்திலே திருச்சபைகொண்டிருந்த கிரேக்க பாப்புமார், வேதசாட்சிகளின் பெருமையையும் எடுத்துக்கூறினர். அதன்மேல் கிரேக்கநாட்டிலே அப்போஸ்தலிக்க ஸ்தானபதியாயிருந்து தாம் ஆற்றிய சேவையைப்பற்றிக் குறிப்பிட்டு, யுத்தகாலத்திலே தமக்குமுன்னிருந்த 12-ம் பத்திநாதபாப்பானவரின் குன்றாத பிறர்சிநேகம் காரணமாக யுத்தத்தாலே கஷ்டநஷ்டங்களுக்குள்ளான அத்துணை அநேகமான மக்களுக்குச் சேவைபுரியக் கூடியதாயிருந்தது தமக்குப் பேராறுதலெனக் கூறிநின்ருர். ஈற்றில் அவர் போல் அரசருக்குக் "கோள்டின் ஸ்பேர்" எனப்படும் மகிமை வரிசையும், தமது கையெழுத்திட்ட அரசரின் படம் ஒன்றும், தமது தேர்தலின் ஞாபகார்த்த தங்க மெடல் ஒன்றும், அரசிக்கு அழகிய சித்திர வேலைப்பாடமைந்த தேவதாயாரின் படம் ஒன்றும் சந்மானிக்கலாயினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆனி மாதம்

### பரிசுத்தபாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துக்கள்

**வேதபோதக கருத்து:** கிறீஸ்துநாதரை அகற்றிய சமுதாயத்தில் உழைக்கும் குருமாருக்காக வேண்டிக்கொள்வது.

**பொதுக்கருத்து:** இரட்சணிய அலுவலில் ஈடுபடும் சாதாரண கத்தோலிக்கர் தங்களுடைய ஞானப்பணிக்குத் தேவையான ஆத்மீக, போதனை, விஞ்ஞான, யந்திரீகஅறிவில் உறுதியாக ஆயத்தப் படுத்தப்படுமாறு மன்றாடிக்கொள்வது.


சத்திய வேத

# பாதுகாவலன்

1959-ம் ஆண்டு
ஆனிமாதம் 18-ந் திகதி


## மரியாயும் ருஷியாவும்

"இனிமேல்வருங்காலம் தேவதாயாரது வெற்றியின்சகாப்தமாய் இருக்கும்; மரியாய் அடைந்துகொள்ளும் இந்தவெற்றிக்குப்பின் திருச்சபையின்வெற்றி தொடர்ந்துவரும்." இவ்வாறு மரியாயின்குருமார்சபையை அடியிட்டவரான வண. சாமினேட்சுவாமியார் 1838-ம்ஆண்டு புரட்டாசிமாதம் 16-ந்திகதியன்று 16-ம்கிறகோரியார்எனும் பாப்பானவருக்கு எழுதியிருந்தார். ஆம்,மரியாயின் அப்போஸ்தலரான இந்தப்பரிசுத்தகுருவானவர் ஓர்பெரும்உண்மையை எழுதியிருக்கின்ருர். இவர் ஓர் அர்ச்சியசிட்டராக விளங்கியிருந்தார். அதனுல் அர்ச்சியசிட்டர்களே கண்டுகொள்வதான எதிர்காலம்பற்றிய காட்சிஒன்றைக் கண்டிருந்தாரென்க.

நிற்க, மரியன்னை ஆத்துமசரீரத்துடன் பரலோகத்துக்கு ஆரோபணமாயினுரென்ற பெரும்விசுவாசசத்தியத்தை நமதுபாக்கியமான ஞாபகத்துக்குரியவரான 12-ம்பத்திநாதபாப்பானவர் வரையறுத்து, 1950-ம் ஆண்டு கார்த்திகைமாதம்1-ந்திகதியன்று பெரிதும்மாட்சிமையுற்றுத் தேசோமயமாய்விளங்கிய அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்தில் நின்றுகொண்டு பெரும்பக்திப்பரவசத்துடன் பிரகடனஞ்செய்தருளினுர். அச்சுபசந்தர்ப்பத்திலே தங்கள் பரலோகஇராக்கினிக்கு இந்த மாபெரும்மகிமை அளிக்கப்படும் திருவைபவத்தைக் கண்டுகொள்வதற்காக உலகின்எல்லாப்பகுதிகளிலுமிருந்து ஏறக்குறையப் பத்துலட்சம்விசுவாசிகள் ரோமாபுரியில் குழுமியிருந்தார்கள். பக்திப்பிரவாகம் பெருக்கெடுத்துப் பாயப்பரவசமூற்றுச் சமுத்திரம் போலத் தேங்கிநின்ற பக்தர் குழாமின்மத்தியிலே கிறீஸ்துநாதரின்பதிலாளியானவர் எழுந்துநின்று, தமக்குண்டான வழுவாவரத்தைமேற்கொண்டு வசனித்ததாவது: "தேவதிருக்கன்னித்தாயார் ஆத்துமத்தோடும், சரீரத்தோடும் பரகதியில் இருக்கிறார் என்பதைச் சர்வேசுரனுல் நமக்கு அருளப்பட்டுள்ள அதிகாரத்தைக்கொண்டும், தூய ஆவியானவரின் துணையைக்கொண்டும் வரையறுத்துப் பிரசித்தமாக அறிக்கையிடுகிறோம்'' என்பதே.

மரியன்னைக்கு அருளப்பட்ட இந்தப்பெரும்மகிமையானது அப்புனிதவருடத்திற்கே முடிசூட்டுவதாகும் மகிமையாயிற்று. நமதுகாலத்தில் நம்முடையசகாப்தத்தில் நிகழ்ந்துள்ள ஓர்மகாப்பெரும் சம்பவமென்றே சந்தேகமின்றி இதனைச்சொல்லலாம். வரையறுத்துப் பிரகடனஞ்செய்யப்பெற்ற இந்தப் பெரியவிசுவாசசத்தியத்துக்கு நம்முடையகாலம் உள்ளபடியே அதிகம்உசிதமானதெனலாம். ஏனெனில், இக்காலத்திலே பரந்துள்ள லோகாயதமானது நித்தியத்தின் கருத்துகள், மதிப்புகளையெல்லாம் அகற்றியும், மறைத்துங்கொண்டு வருகின்றது. பாவமே வெற்றிகொள்வது போல் காணப்படுகிறது. ஓர்காலம் ருஷியாவிலே மரியன்னையின் அன்பையும், அருளையும் வெகுவாகப்பெற்றிருந்த மக்களின் இதயங்களிலிருந்து அவரை அகற்றிவிடுதற்கான பலாத்காரமுயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன. பலநூற்ருண்டுகளாக மரியன்னையின் படங்கள் ருஷியமக்களின் வீடுகளிலே பிரசித்தமாகவைத்துப் பூசிக்கப்பட்டுவந்தன; ஆனுல், இன்று அவைகள் கண்காணுத மறைவிடங்களை அடைந்திருக்கின்றன. ருஷியா மரியாயின் தேசமாய் இருந்தது. அகிலருஷியாவினதும் இதயமாயும், சோவியற்ஆட்சிப்பீடமாயும் அமைந்துள்ள கிறெம்லினின்மத்தியிலே நிறுவிகின்ற மஸ்கோநகர் ஆசனக்கோவில் மரியாயின் மோட்சாரோபணத்துக்கே அர்ப்பணஞ்செய்யப்பட்டுள்ளது. இந்தஆலயம் 1324-ம்ஆண்டளவிலே கட்டப்பெற்றது. போல்ஷிவிக்கம் வெற்றிபெற்றதுடன் இந்தஆலயம் மூடப்பட்டது. பூசிதமானவைகளைக் கொள்ளையிடும்கைகள் அதன் புனிதத்தைப் பங்கப்படுத்தின. மரியன்னை ருஷியாவின் இதயத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்.

ஆனுல், தேவஅன்னை பாத்திமாவிலே தாம் பன்முறைகாட்சியளித்த பிள்ளைகளுக்குக் கூறியதை நாம் மறந்துவிடப்படாது. "எனதுவேண்டுகோள் பூர்த்திசெய்யப்படுமானுல் ருஷியா மனந்திருப்பப்படும்; சமாதானமும் ஏற்படும்"என்று அவர்கூறலாயினுர். அவரின்வேண்டுகோள் அகிலமுழுவதிலுமுள்ள கத்தோலிக்கமக்கள் சகலருடையவும் செபத்தையும், தபத்தையுமே ஆர்வத்துடன் வேண்டிநிற்கின்றது. அதிகமதிகம் செபதபஞ்செய்யும்படியாக எல்லோரையும் பரிந்துகேட்கின்றது. நாம்போதியசெபஞ்செய்யவில்லை. போதியதபஞ்செய்யவில்லை. செய்திருந்தால் இதுவரை ருஷியாவின் பெரியமனந்திரும்புதலை நிச்சயமாகக் கண்டிருப்போம். அப்போது முன்சொன்ன வண. சாமினேட்என்ற பரிசுத்தகுரவர்கண்ட அந்தப்பெருங்காட்சி நமதுகாலத்திலே நிறைவேறுவதைக் காணக்கூடியவர்களாயிருப்போம். ஓர்கால்ருஷியா மரியன்னைவழியாகச்சர்வேசுரனிடம் வெற்றிகொள்ளப்படுமானுல் அது மரியாயின்வெற்றியாய் இருக்கும், திருச்சபையின் வெற்றியாயிருக்கும். இந்தஉலகிலுள்ள தீமைகளின் ஊற்று மரியாயின்வல்லபத்தால் ஆசீர்வாதங்களின்ஊற்ருக மாற்றப்பட்டுவிடும். மறைபொருளாய் இருந்துவரும் இந்தத்தேவஇரகசியம் இன்றைய சாத்தானின் ருஷியாவை நாளைய அப்போஸ்தலிக்க ருஷியாவாக நன்குமாற்றிவிடலாமன்ரே!

---

## இந்திய ஜனுதிபதியின் விஜயம்

இந்தியகுடியரசின் ஜனுதிபதி-பாரதத்தின் முடிசூடாமன்னர்—ராஷ்டிரபதி டக்றர்இராஜேந்திர பிரசாத்அவர்கள் சென்ற16-ந்திகதி செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு முதன்முறையாக விஜயஞ்செய்திருக்கின்ருர். பாரதத்தின் விடுதலைப்போர் முனையிலே நேர்நின்று பொருதித் தாய்நாட்டின் சுதந்திரத்திற்காக அருந்தியாகங்கள்செய்த பெருந்தியாகசீலருமான ராஜன் பாபுஅவர்கள் அன்றுகாலை 11-30மணிக்கு இரத்மலானை விமானநிலையத்தில் வந்திறங்கியபோது, இராணுவமரியாதையுடன் மகத்தானவரவேற்பு அளிக்கப்படலாயிற்று. ஏறக்குறைய ஒருவாரகாலம் எமதுநாட்டிலே தங்கவிருக்கும் ஜனுதிபதி அவர்கள் தாயகம்திரும்பும்போது இம்மாதம்22-ந்திகதியாகிய வருகிறதிங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கும் விஜயஞ்செய்யவிருப்பது பெரிதும்வரவேற்கத்தக்கதே. அதனுல் பெருமகிழ்ச்சியடைந்திருக்கும் யாழ்ப்பாணமக்கள் முன்னெருபோதுமே நிகழ்ந்திராதசிறந்தமுறையிலே தமிழ்க்கலாசாரத்துக்கிணங்கப் பெருமிதமானவரவேற்புஒன்று அளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதும் பாராட்டத்தக்கதே. யாழ்ப்பாணமக்களைக் காணவேண்டும்; இலங்கைத் தமிழ்மக்களின் பண்பாட்டைக் காணவேண்டுமென்ற காதலுடன்வருகின்ற ஜனுதிபதிஅவர்களை மங்கலகரமாகவரவேற்க யாழ்ப்பாணத் தமிழ்மக்களும் அத்துணை பெரும் காதல்கொள்வது ஆச்சரியமன்று! காந்திஜியின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறவர் என்றமுறையிலே அதிகாரத்தையும், அந்தஸ்தையும்கவனியாது எடுத்தகருமத்தைத் திறம்படச் செய்துமுடிப்பதையே தமதுஏக இலட்சியமாகக் கொண்டவரும், எளியவாழ்க்கையையும், உயரிய நோக்கத்தையும் மேற்கொண்டுவந்த காரணமாகச் சுதந்திர இந்தியாவிலே இன்றுமகாஉயர்ந்த பதவிவகித்திருப்பவருமான ராஜன்பாபுவாழ்க! இலங்கைத் தமிழ்மக்களின் தலைமையிடமாகத் திகழும் யாழ்ப்பாணத்திலே அவருக்குநல்வரவாகுக!

---

● இத்தாலிய சுரங்கத்தொழிலாளர் 34பேர் மத்தியகால தேசியஉடைகள்தரித்துக் குதிரைகளிலே சவாரிசெய்து அர்ச். பேதுருவானவர் மகாதேவாலய சதுக்கத்தையடைந்தார்கள். பின்னர் பரிசுத்தபிதாவின் பேட்டிபெற்று அவருக்கு லோகப் பொருட்களை அன்பளிப்புச் செய்தார்கள்.

---

## சுதேச வர்த்தமானம்

### நகரசபையின் வேண்டுகோள்

யாழ்ப்பாணத்திற்கும், ஏனைய தமிழ்ப்பகுதிகளுக்கும் தமிழ்ஸ்ரீபொறித்த புதியபஸ்களை அனுப்பிவைக்குமாறு யாழ்ப்பாணநகரசபை பிரதமருக்கு ஓர்வேண்டுகோள்விடுத்திருக்கிறது. தனிச்சிங்களச்சட்டத்தைப் பாதிக்காதவகையிலே தமிழ்ப்பிரதேசங்களில் "நியாயமானஅளவுக்குத் தமிழ்உபயோகிக்கப்படும்"என்ற அரசாங்கத்தின் வாக்குறுதியைக் கௌரவிக்குமுகமாகவாவது தமிழ்ஸ்ரீ இலக்கப்பஸ்களையாழ்ப்பாணத்திற்கும், மற்றும் தமிழ்ப்பிரதேசங்களுக்கும் அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டுமென்பதே அதுசெய்துள்ள வேண்டுகோளாகும். சென்ற10-ந்திகதியன்று நடந்தேறிய யாழ்ப்பாணநகரசபையின் மாதாந்தக்கூட்டத்திலே இது ஓர்பிரேரணையாக அரங்கேறியிருக்கிறது.

### புதிய மந்திரிசபை

இலங்கையிலே சென்ற9-ந்திகதி செவ்வாய்க்கிழமை காலை10-30மணிமுதல் பிற்பகல்12-15மணிவரை மந்திரிசபை இருக்கவில்லை. பிரதமரும் இருக்கவில்லை. மந்திரிகளும் இருக்கவில்லை. காலை10-30மணிக்குப் பிரதமர் கவர்னர்ஜெனறலிடம் இராசிநாமாக் கடிதங்களைச் சமர்ப்பித்தார். பின்னர் 12-15மணிக்குப் புதியமந்திரிகள்பதினுறுபேரும் இராணிமாளிகைசென்று விசுவாசப்பிரமாணம் செய்துகொண்டார்கள். இவர்கள் அனைவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்தவர்கள். அதனுல் இப்போது இருந்துவருவது சர்வஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மந்திரிசபையே. திரு. ஜே. சி. டபிள்யு. முணசிங்கா, திரு.ஹென்றி அபேவிக்கிரம, திரு. எம். பி. டி. சொய்சா, திரு. பி. பி. ஜீ. கலுகல்லஎனும் நால்வரும் புதியமந்திரிகள்.

### நவசீனுவின்போக்கு யாது?

சமீபத்திலே செஞ்சீனுவில் பலவாரங்களாகத்தொடர்ந்து சுற்றுப்பிரயாணஞ்செய்து திரும்பியுள்ள அமெரிக்கநிருபர்ஒருவர் "யூ எஸ்.நியூஸ் அன் ஒல்ட்றிப்போட்"எனும் பத்திரிகையில் ஓர்கட்டுரை வெளியிட்டிருக்கின்ருர். அதிலேஅவர் குறிப்பிட்டிருப்பதுவருமாறு: "செஞ்சீனுவில் இன்று எத்துறையில் பார்த்தாலும் இராணுவமுஸ்திப்பும், இராணுவப்பயிற்சியும் நடைபெறுவதாகவே காணப்படுகின்றது. அங்குதொழிற்சாலைகளின் உற்பத்திகள் அமோகமாகப் பெருகிவருவதாய்ச் சீனுவெளியிட்டுவரும் தகவல்களில் ரசமில்லை. கொடுக்கப்படும் கணக்குகளையிட்டுக் குறைவாகவே உற்பத்திகள் இருக்கின்றன. சீனுவில் அமெரிக்கருக்குவிரோதமான பிரசாரமே எங்கும்மலிந்து காணப்படுகிறது. இன்றுஅங்கே உண்மையில் பெரிய ஆயுதபலம் கிடையாது. மக்கள்பலமே அங்குள்ள முக்கியஅம்சமாகும். ருஷியாவின்உதவியின்றிச் செஞ்சீனு எத்தகையபோரிலும் கலந்துகொள்ளமுடியாது. சிறுபோர்களில் வேண்டுமானுல் ஏராளமானமக்களைக் கொண்டுபோய்க்குவித்துப் பலியிடமுடியும். எங்குபார்த்தாலும் வீரர்படைகளை ஆக்குவதில்தான் சீனு கருத்தாயிருக்கிறது. உழவர்படை, தொழிலாளர்படை, சுகாதாரப்படை, இராணுவப்படை என்பனவாகப் பலபிரிவானபடைகள் உருவாக்கப்படுகின்றன. வேலை, அதிகவேலை என்பதுதான் செஞ்சீனுவின் குறிக்கோளாகும். அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள், கூட்டுறவுமுறைகள், கட்டாயசேவைகள் ஆதியவற்றை எதிர்த்து அங்கேமக்கள் புரட்சிசெய்வார்களென்று எதிர்பார்ப்பதற்கில்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கும் இங்கும்

## புத்தபிக்கு எதிர்க்கின்றார்

"உதவிநன்கொடைபெறும் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டுமென இன்று எழுந்துள்ள பொதுக்கூச்சல் இந்த அரசாங்கத்தை வீழ்த்துவதற்கான மக்களின் ஒரு முயற்சியாகும். உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை எடுத்துநடத்துவது அரசாங்கத்தின் நோக்கமானால் இலங்கைப் போக்குவரத்துச்சபை (இ. போ. ச.) போன்ற தேசியமய சேவைகளுக்கு ஏற்பட்டகதிதான் இதற்கும் நேரும்."

**வனம். பி. தர்மரத்தின தேரோ,**
புத்த கல்விநிதித் தலைவர், பெலியகொடை.

"இத்தனைவருடகாலமும் நான் கடைப்பிடித்துவந்த வகுப்புவாத பிற்போக்குக் கொள்கைகளை விட்டுவிட்டேன்; அக்கொள்கைகளுக்கும் தனக்கும் இனிமேல் எவ்வித தொடர்புமில்லை; என்னைக் காப்பாற்றக்கூடிய கட்சி எங்களது லங்கா சமசமாஜகட்சிதான்; அதில் எனக்கு நம்பிக்கை உண்டு என்றெல்லாம் பொதுமேடையிலிருந்து தெரிவிப்பாரானால் எங்கள் கட்சியில் தான் சேரவேண்டுமென்ற பிலிப் குணவர்த்தனாவின் கோரிக்கையை நாங்கள் பரிசீலனைசெய்யமுடியும்."

**டக்டர் கொல்வின் ஆர். டி சில்வா,**
வெள்ளவத்தை – கல்கிசை எம். பி.

## மந்திரங்கள் தோல்வியுற்றன

"எம். ஈ. பி. புரிந்த அட்டூழியங்களுக்குத் திரு. பிலிப்குணவர்த்தனாவும், அவரது சகாக்களுமே பொறுப்பாளிகளாவர். அவரது மந்திரங்களான பொட்டயா, தட்டயா, நொண்டியா, மட்டயா தோல்வியுற்றதும் அவர் எங்களதுகட்சியின் ஆதரவைக் கோருகின்றார். கீழே விழுந்திருப்பவனை உதைப்பது எங்களுடைய கொள்கையல்ல. அவர்செல்லும் தவறான பாதைபற்றி நாங்கள் ஆரம்பத்திலேயே அவரை எச்சரித்தோம். ஆனால், தவளை எப்பொழுதும் நீரில் இருக்கத்தான் விரும்பும்."

**கொல்வின் ஆர். டி. சில்வா, எம். பி.**

"அலையலையாக இராசினாமாக்கள் வந்தபடியால், அரசாங்ககட்சி அங்கத்தவர்களின் எண்ணிக்கை குறைந்தது. சனப்பிரதிநிதிகள்சபைக் கூட்டத்தை இம்மாதம் 30-ந் திகதிக்குப் பின்போடும்படி கவர்னர்–ஜெனறலிடம் சொல்லிப் பிரதமர் நிலைமையைச் சமாளித்துக்கொண்டார். கட்சிமாறுதல் மலிவாகியுள்ள ஓர்யுகத்தில் நாங்கள் வசிக்கிறோம். ஆனி 30-ந் திகதிதான் அதன்விளைவுகளை அறியமுடியும். அவரது கட்சியிலுள்ள அனைவருக்கும் மந்திரிபதவிகள் தேடிக்கொடுக்க முடியாமற் போய்விட்டால் அத்திகதியன்று பிரதமரின் சமப்படுத்தும் முயற்சிகளெல்லாம் தோல்வியடையலாம்."

**திரு. லெஸ்லி குணவர்த்தனா,**
எம். பி.

## நாடு காப்பாற்றப்பட்டுவிட்டது

"பேராபத்திலிருந்து எங்களுடைய நாடு காப்பாற்றப்பட்டுள்ளது. கம்யூனிஸம் தவிர்க்கப்பட்டுள்ளது. சமீப வருங்காலத்தில் அது இலங்கையில் தலைகாட்டமாட்டாது. உலகில் பெரும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. கல்வி, கைத்தொழில், அரசாங்கம் ஆகிய துறைகளிலேயே முக்கிய மாற்றங்கள் ஏற்படுகின்றன. அண்மையில் ஏற்பட்ட மந்திரிசபைநெருக்கடியை யார் எதிர்பார்த்தனர்? கம்யூனிஸத்திலிருந்து எமதுநாடு காப்பாற்றப்பட்டுவிட்டது. நீதியான மாற்றங்கள் நிலைக்கும். கெட்ட நோக்கங்களைக்கொண்ட மாற்றங்கள் நிச்சயமாக அழிந்தொழிந்துவிடும்."

**செனற்றர் ஈ. டபிள்யு. கன்னங்கரா,**
தலைவர், வை. எம். சி. ஏ.

## மந்திரிகளுக்கு எச்சரிக்கை

"எனது மந்திரிசபையில் இனிமேல் சிறுசிறுகட்சிகளும், குஸுகுஸுக்கும் பல்களும் வேண்டாம். இவைகள்எல்லாம் இனிமேல் நின்றுவிடவேண்டும். எவராகிலும் அதிருப்திப்பட்டால் உடனே வெளியேறிவிடலாம். என்னுடனோ அன்றேல் ஏனைய மந்திரிகளுடனோ ஒத்துழைக்க முடியாதவர் எவராவது இருந்தால் அவரை வெளியேற்றிவிட நான் தயங்கமாட்டேன். இராசினாமாச் செய்யுமென்று கேட்கவும் தயங்கமாட்டேன். இத்தகைய ஓர் நிலைக்கு இனிமேல் நான் இடங்கொடேன். மந்திரிசபையிலே சிறு கோஷ்டிகள் இருக்கின்றனவென்று அறியவந்தால் உடனே கடுமையான நடவடிக்கை எடுப்பேன். இது நிச்சயம். நீங்கள் செய்யவேண்டிய பணி பெரிது. ஆகவே, ஒத்துழையுங்கள்."

**பிரதமர் பண்டாரநாயகா**

## கழுதை தேய்ந்து கட்டெறும்பானது

"எம். ஈ. பி. அரசாங்கம் இந்த நாட்டினைக் கடந்த மூன்று வருடங்களாக ஆட்சிபுரிந்து வந்திருக்கிறது. முதலாவது வருடத்திலே யூ. என். பி. யைக் குழிதோண்டிப் புதைப்பதில் அது தன்காலத்தைக் கழித்தது. திரு. பண்டாரநாயகாவின் 24 மணித்தியால மொழிக்கொள்கைப் பிரச்சினையைத் தீர்ப்பதிலே இரண்டாவது வருடத்தைக் கழித்தது. கடந்தவருடமான மூன்றாவதுவருடத்தை ஆயுதப்படைகளுடன் இந்நாட்டை ஆள்வதில் கழித்தது. இப்போது எம். ஈ. பி. அரசாங்கம் அநேகமாகச் சீர்குலைந்துவிட்டது. நான்கு கட்சிகளை ஒன்றாகச்சேர்த்து அமைக்கப்பட்ட (எம். ஈ. பி.) மக்கள் ஐக்கியமுன்னணி இப்பொழுது கழுதை தேய்ந்து கட்டெறும்பானதுபோல் தேய்ந்துவிட்டது. ஒருகட்சியே இப்பொழுது மிச்சமாயிருக்கிறது."

**திரு. எம். டி. எச். ஜயவர்த்தனா,**
முன்னைநாள் நிதிமந்திரி.

## ஒருபோதும் சேரமாட்டாது

"இன்று அரசாங்கத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே மிச்சமாக இருப்பதினால் இந்நாட்டை ஆள்வதற்குத் திரு. பண்டாரநாயகாவுக்கு உரிமையில்லை. மக்கள் அவரை எம். ஈ. பி. வேலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அதிகாரத்தில்வைத்தார்களேயொழிய (எல். எஸ். எஸ். பி.) ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வேலைத்திட்டத்தைக்கொண்டல்ல. பிரதமர் தனது கடந்த மூன்றுவருடகாலத்தூர்ஆட்சியை நாங்கள் மறந்துபோக வேண்டுமென ஆசிக்கின்றார். இவ்வாட்சியில் ஆயிரக்கணக்கான மக்கள் உயிர்துறந்தார்கள். நிரபராதிகளான ஆயிரக்கணக்கான மக்களின் இரத்தக்கறைபடிந்த கைகளையுடைய ஒருகட்சியுடன் (எம். ஈ. பி.) எங்கள்கட்சி (யூ. என். பி.) ஒருபோதும் சேராது."

**திரு. எம். டி. எச். ஜயவர்த்தனா,**
முன்னைநாள் நிதிமந்திரி

* * *

## நீதிமந்திரி இராசினாமாச்செய்தார்

பிரதமர்பண்டாரநாயகாவின் சர்வ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மந்திரிசபையிலிருந்து நீதிமந்திரி செனற்றர், எம். டபிள்யூ. எச். டி.சில்வா சென்றவியாழக்கிழமை தமதுமந்திரிபதவியை இராசினாமாச் செய்யலாயினர். இருதினங்களின்முன்னமே ஏனையமந்திரிகளுடன் விசுவாசப்பிரமாணஞ் செய்துகொண்டஇவர் மந்திரிபதவியிலிருந்து மாத்திரமல்ல, செனற்றர்பதவியிலிருந்தும் இராசினாமாச்செய்து விலகிக்கொண்டார். ஆயினும்,இவர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் ஓர் அங்கத்தவராய் முன்போல இருந்துவருவார்.

## மருதமடுத் திருப்பதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருபது குடும்பத்தினர் 1670-ம் ஆண்டு பரிசுத்த செபமாலை இராக்கினியின் அலங்கார சுரூபத்தைக் கண்டிப் பிரதேசத்துக்கு எடுத்துச் சென்றனர். தேவதாயின் அடைக்கலத்தால் அவர்கள் பலநாள் காடுகளிற் சுற்றித் திரிந்து தங்களுடைய காலத்தைச் செபத்திலும், தவத்திலும் கழித்து வந்தனர். இறுதியில் அவர்கள் ஒரு சிறு கிராமத்தைக் கண்டு அங்கு குடியேறினார்கள். அந்தக் கிராமம் இப்பொழுது 'மருதடு' என்று வழங்கப்படுகிறது. இந்தப் புதிய ஸ்தலத்தின் ஞாபகார்த்தமாகவே பரிசுத்த செபமாலை மாதா, மடுநாயகி என்று அழைக்கப்படுகிறார். உலாந்தாக்காரர்களால் துன்புறுத்தப்பட்ட ஏழைக் கத்தோலிக்கரும், கத்தோலிக்க குருக்களும் அவர்களுடைய சித்திரவதைகளுக்கு ஆற்றாது தங்களுடைய வீடுகளிலிருந்து வெளியேறினர். தெய்வ கடாட்சத்தால் அவர்களும் மருதமடுபோய்ச் சேர்ந்தனர்.

(தொடரும்)

## உதவிபெறும் பாடசாலைகள்

உதவிநன்கொடைபெறும் பாடசாலைகளின் முகாமைக்காரர்கள் தங்கள் பாடசாலைகளை அரசாங்கத்திடம் ஒப்படைக்க விரும்புகிறார்களா? என்று வித்தியாதிபதி விரைவிலே அவர்களைக் கேட்பாரெனத் தெரியவருகிறது. அவர்கள் தங்கள்பாடசாலைகளை ஒப்படைக்க முன்வந்தால் அவைகளைப்பொறுப்பேற்க அரசாங்கம் தயாராயிருப்பதாகச் சொல்லப்படுகிறது. கல்விமந்திரியின் உத்தரவின்பேரில்தான் இந்தநடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

## ஸ்பெயினின் அதிசய தேவாலயம்

ஸ்பெயினிலே குவாடறாமாமலைகளின் அடிவாரத்தில் "இறந்துபட்டவர்களின் பள்ளத்தாக்"கிலே அந்நாட்டின் உள்நாட்டு யுத்தத்தில் இறந்த பத்துலட்சத்துக்கு மேற்பட்ட ஸ்பானியர்களின் ஞாபகார்த்தமாக மனவருட்சிக்குரிய ஞாபகசின்னம்ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. இஃது ஓர் கன்மலைக்குன்றின்பக்கமாகக்குடைந்து, கற்பாறையிலேயே பொழிந்து அமைக்கப்பெற்ற பிரமாண்டமான ஓர்ஆலயமாகும். இதன்உச்சியில் உலகிலேயே மிகப்பிரமாண்டமான – அதாவது492 அடிஉயரமான இராட்சத திருச்சிலுவைஒன்று நிறுவிநிற்கின்றது.

இது ஓர்தேசியஞாபகசின்னமாகத் திகழ்ந்து, ஸ்பானிய உள்நாட்டுயுத்தத்தில் தேசீயக்கட்சியினர், குடியரசுக் கட்சியினராகிய இருபாலாரிடையேயும் இறந்தவர்களைக் கௌரவப்படுத்துகின்றது. றோமாபுரியிலுள்ள அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்தில் உள்ளதைப்போன்று அத்துணைபாரியதெனச் சொல்லப்படுகின்ற இதன் டோமிலே அர்ச்சியசிட்டவர்களும், வேதசாட்சிகளும் தேவனிடம் எழுந்தருளிச்செல்வதை வர்ணிக்கும் பல வர்ணச்சித்திரவேலைப்பாடுகள் அலங்காரமாகஅமைந்து அதற்கோர் கம்பீர பெருமையை அளித்துக்கொண்டிருக்கிறது. இவ்வாலயத்தின் மிகப்பாரிய நடுப்பகுதியானது சித்திரத்தொங்கல் வஸ்திரங்கள் நிரைப்படுத்தப்பெற்று, பக்கபலிபீடங்கள் ஒழுங்குமுறையாய் அமைக்கப்பட்டு, 853அடிநீளமுடையதாய் இருக்கின்றது.

இந்தஆலயத்தை அமைக்கும்வேலை 1942-ம் ஆண்டு தொடக்கப்பட்டு இவ்வருடந்தான் பூர்த்தியடையலாயிற்று. ஸ்பானியஉள்நாட்டுயுத்தத்திலே தேசீயபடைகளுக்குத் தலைமைவகித்த ஜெனறல்பிராங்கோ சமீபத்திலே இதனைத்திறந்துவைத்தார். இந்தப்பிரமாண்டமானஆலயத்தின் பிரதானபலிபீடத்தில்அமைந்துள்ள அறையுண்ட பெரியதிருச்சிலுவைமீது மேற்புறத்தினூடாகச் சூரியஒளிவிழும்போது அதுசோபிதமுற்று பக்திப்பரவசகாட்சி அளிக்கின்றது. ஆலயத்தின் உச்சியிலுள்ள இராட்சத திருச்சிலுவை இருக்கும்இடத்துக்கு ஆலயதளத்திலிருந்து தரிசகர்களைமேலே தூக்கிச்செல்லும் கருவிஒன்று அமைந்திருக்கிறது. இவர்கள் அதனண்டை போய்ச்சேரத் 984அடிஉயரத்துக்கு மேல்நோக்கிச் செல்லவேண்டியிருக்கிறது.

## துன்பப்படும் மௌன...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள். (இவ்வாரமுடிவில் வழமையாகச் சொல்லிவந்த கட்டளைச்செபத்தைச் சொல்வார்கள்.) திவ்வியபூசை இந்நாட்களிலே திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதத்துடன் முடிவடையும். இந்நேரத்தில் துன்பப்படும் மௌனதிருச்சபைக்காக ஏற்ற செபத்தை ஓதுவார்கள். அநேகர் திவ்வியபூசைப்பலியில் பங்குபற்ற வசதியளிக்கும்படி கட்டளைக்குருமார் தங்களது பங்குக்கோவில்களில் இந்நாட்களில் மாலைப் பூசை நிறைவேற்ற அனுமதியளிக்கப் பட்டிருக்கிறார்கள்.

ஆனிமாதம்28-ந்திகதி ஞாயிற்றுக்கிழமையன்று துன்பப்படும் மௌனதிருச்சபைக்காக நடத்தும் செபவாரம் நமதுமேற்றிராசனத்திலுள்ள திரிகோணமலை, மட்டுநகர், கல்முனை முதலிய முக்கிய இடங்களில் செப சுற்றுப் பிரகாரவாழ்த்துதலுடன் பூர்த்தியடையும். மட்டுநகரிலே சுற்றுப்பிரகாரங்கள் பங்குக்கோவில்களில் ஆரம்பமாகிப் பார்வீதியிலுள்ள லூர்துமாதாகோவிலில் முடிவடையும். திரிகோணமலை, கல்முனைச் சுற்றுப்பிரகார வீதிகளின்விளக்கம் அங்கங்குள்ள தலைமைக்குருப்பிரசாதிகளால் (Vicars Forane) நிர்ணயிக்கப்படும். பரிசுத்தபிதாவாகிய பாப்பாண்டவருடைய வேண்டுகோளுக்கிணங்கி, நாம் நமது மேற்றிராசனத்தில் நிகழ்த்தும் இச்செபவாரத்திலே மூன்று முக்கியகுறிச்சிகளிலும் (Vicariates Forane) உள்ள சகலபங்குக்கோவில்களும் திருப்தியாய்ப் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றன.

பரிசுத்தபிதா 23-ம்அருளப்பர் இத்தீவிர செபஅப்போஸ்தலத்துவத்தை மௌனதிருச்சபைக்காக அதிகம் கண்காணித்திருப்பதால், அவரதுஸ்தானாதிபதியாய் நம்மிடையேவிளங்கும் ஆண்டகையவர்கள் றோமாபுரிக்குச் சமர்ப்பிக்குமாறு சகல மேற்றிராணிமாரும் இந்நடவடிக்கைப்பற்றிய அறிக்கைகளைத் தமக்குஅனுப்பிவைக்குமாறு கேட்டிருக்கிறார். ஆதலால், மூன்று முக்கியகுறிச்சிகளினதும் தலைமைக்குருப்பிரசாதிகள் (Vicars Forane) தங்களது செபவாரநிகழ்ச்சிகளை நமக்குச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**✠ இக்னேசியஸ் கிளெனி, யே. ச.**
திரிகோணமலை மேற்றிராணியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தக மதிப்புரை

## சூழற்பயிற்சி

நாலாம் வகுப்பு

உரிமை:

க. பே. முத்தையா—ம. விக்ரர்

விலை: ரூபா 1-20.

பிரசுரம்:

அர்ச். சூசைமாமுனிவர் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

பிரதமவகுப்புக்களில் சூழல்பாடம் கட்டாயபாடமாக அமைந்துள்ளது. இப்பாடத்தால் பிள்ளைகளின் பொது அறிவு விருத்தியடையும். அத்தோடு அவதானசக்தியும் வளர்ச்சியுறும். ஆயினும் இப்பாடம் நூல்முகமாகக் கற்பிக்கக்கூடியதன்று. ஓரளவுக்கு நேர்முகமாக விஷயங்களை மாணவர் கண்டறதல்வேண்டும். அவ்வாறு கண்டறிந்த விடயங்களை மாணவர் மனதிற் பதிப்பதற்கு ஆசிரியர் தக்க வழிவகைகளைக் கையாளல் இன்றியமையாதது.

இத்தகைய அரியபதித்தல் பயிற்சிகளை அடக்கியதுதான் இந்நூல். இது நாலாம்வகுப்பு மாணவர்க்குப் பயன்படத்தக்கவகையில் 17பயிற்சிப்பாடங்களை அடக்கியுள்ளது. இதிலே சரிபிழைகாணல், கீறிட்டஇடம்நிரப்புதல், பொருந்தாத சொல்லின்கீழ் கீறிடல், சுருக்கவிடை எழுதுதல் என்பன போன்ற பலதிறப்பட்ட விஞக்கள் இடம்பெற்றுள்ளன. ஆகவே, இந்நூல் சூழல்பாடசம்பந்தமாக மாணவர் தேடியஅறிவை மனதில்கலைந்துபோகாமற் காக்கக்கூடிய அரியபயிற்சிக் கைந்நூலாகுமென்பதற் கெட்டுணையும் ஐயமில்லை. எமக்கனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றேம்.

---

## வைகாசி வணக்கமாதமுடிவு

கடந்த ஒருமாதகாலமாக எமது பாடசாலைமாணவர்களால் கொண்டாடப்பட்ட தேவமாதாவின் வணக்கமாதம் அன்று வைகாசிமாதம்30-ந்திகதி சனிவாரம் முடிவுற்றது. வழக்கம்போல இந்தமுடிவுவிழாவைக் கொண்டாடுமாறு முருங்கன் கிறீஸ்துஇராசா பாடசாலையில் 1958-ம்ஆண்டின் மார்கழி மாத எஸ். எஸ். சி. பரீட்சையில் சித்தியடைந்தமாணவர்கள் எல்லோரும் இவ்வருடம்முன்வந்தார்கள்.

அன்று மாணவர்கள்எல்லோரும் கூடி ஆலயத்தையும், தேவன்னையின் திருச்சுரூபத்தையும் பலவர்ணக்கொடிகளாலும், இயற்கைமலர்களாலும் அலங்கரித்தனர். பலவர்ணப் பூக்களிடையேயும், பலவர்ணங்களில் ஒளிவீசிய மின்சாரதீபங்களிடையேயும் தேவன்னையின் திருச்சுரூபம் கருணைபொழியும் கரங்களோடும், இரக்கம் நிறைந்த கண்களோடும் கண்டோர்மனதைக் கவருந்தன்மையில் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

மாலை 7-30மணிக்கு வண. எஸ்.இம்மனுவேல் சுவாமியவர்கள்பாடிய வேஸ்பருடன் மாலைஆராதனை முடிவுற்றது. மறுநாள் மாணவர்கள்எல்லோரும் கதிரவன்புலருமுன் துயில்நீத்து எமது திருஅன்னையை ஊர்வலமாகக் கொண்டுசெல்லவிருந்த வீதிகளையும், தெருக்களையும் பலவர்ணமலர்களாலும், கொடிகளாலும், மகரதோரணங்களாலும் அலங்கரித்தனர். "அன்னையின்விழாவை அன்புடன்காண விரைந்தோடிவாரீர்" என மக்களை அழைப்பதுபோல ஆலயமணிகள் ஆர்ப்பரித்தன. பலஇடங்களிலுமிருந்து ஆயிரக்கணக்கான மக்கள்வந்து ஆலயத்தை அடைந்ததும் சுவாமியவர்களால் பாடற்பூசை நிறைவேறியது. பூசை முடிந்ததும் திருச்சுரூபம் பள்ளிச்சிறுர்களும், பாடசாலைமாணவர்களும், ஆசிரியர்களும் ஆலயத்தில் குழுமியிருந்த ஆயிரக்கணக்கான மக்களும் புடைசூழ மாணவிகளால் தாங்கிச் செல்லப்பட்டது. பாடகர்களும், பாலர்களும், வாலர்களும் தேவன்னை மீதுபக்திபரவசத்துடன் பாமாலையும், செபமாலையும் சாத்தியவண்ணமே சென்றனர். ஊர்வலம்முடிந்ததும் அன்னையின்திருச்சுரூபம் ஆலயத்தின்முன் அமைத்திருந்தமண்டபத்தில் ஸ்தாபிக்கப்பட்டதும் குரவர்அவர்களால் பாடசாலையையும், பாடசாலைப் பிள்ளைகளையும் தேவன்னைக்கு ஒப்புக் கொடுக்கும்செபம் வாசிக்கப்பட்டது. பின்னர் திருச்சுரூப ஆசீர்வாதத்துடன் வணக்கமாதமுடிவுவிழா இனிதேமுடிவுற்றது.

—அமிர்தம் குருஸ்

---

தேவதாயின்

## திருச்சுரூப ஊர்வலம்

நுவரெலிப் பங்கிலே தேவதாயின் வைகாசி வணக்கமாதம் அதிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. முடிவு தினமாகிய 31-5-59 ஞாயிறு மாலை தேவதாயின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம்அதிபத்தியருட்சிக்குரியவிதமாக நடைபெற்றது. நூற்றுக்கணக்கான பக்தர்கள் செபமாலை ஓதியவண்ணம் அணியணியாக முன்செல்ல, பாடகர்குழாம் இன்னிசைப் பாக்கள் பாடிப் பின்தொடர, மின்விளக்குகள் ஒளிபரப்ப, வீதிதோறும் மக்கள் வரவேற்றுநிற்க, கண்ணைக்கவரும் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட இரதத்திலே தேவ அன்னையின் திருச்சுரூபம் ஊர்வலமாகச் சென்ற காட்சி பார்ப்போர் மனதைப் பரவசப்படுத்தக் கூடியதாயும், காண்போர் உள்ளத்தைக் கனிந்துருக்கக் கூடியதாயும் இருந்தது. பங்குக் கிறீஸ்தவர்கள் மாதாவில் கொண்டுள்ள மகத்தான அன்பை இவ்வைபவம் எடுத்துக்காட்டியது.

கண்டுகளித்தோன்

---

## வெண்பொன் யூபிலிவிழா

வலித்தூண்டல்

வலித்தூண்டல், அர்ச். அன்னம்மாள்பாடசாலையில் 30-5-59சனிவாரம் ஒரேகுதூகலம். ஆசிரியர்குழுவில் ஒரேஆனந்தம். மாணவர்களிடையே பெரியஆரவாரம். அன்று தங்கள்கட்டளைக்குரவர் வண. எஸ். கோமஸ் சுவாமியவர்களின் குருத்துவ25-ம் வருட வெண்பொன்யூபிலிவிழாவை யிட்டும், தங்கள்மத்தியில் அவர்தொண்டாற்றுங்கால் அதுவரக்காணும் பாக்கியத்தைப்பெற்றதையிட்டும் வலித்தூண்டல் வாசிகளான பெற்றோரும், பிள்ளைகளும் ஆனந்தசாகரத்தில் அமிழ்ந்தியவர்களாய் அதனைச்சிறப்பாகக் கொண்டாடினுர்கள்.

அன்றுகாலை ஆலயத்தில் பெருந்திரளானமக்கள் குழுமியிருந்தசமுகத்திலே யூபிலிநாயகர்அவர்கள் தேவதோத்திர பாடற்பூசை நிறைவேற்றினுர். பெரும்பாலோர் திருவிருந்தருந்தி யூபிலிநாயகருக்காக வேண்டிக் கொண்டனர்.

அதன்பின்னர் 8-30மணிக்குப் பாடசாலைப்பிள்ளைகள் அணிவகுத்துநின்று மாலைஅணிவித்து யூபிலிநாயகரைக் குருமனையிலிருந்து பாடசாலைமண்டபத்துக்கு அழைத்துவந்து வரவேற்றதும் கொண்டாட்டம் ஆரம்பமானது. மாணவர் மா. பேரின்பம், அ. குருசுமுத்துஎன்பவர்கள் யூபிலிவாழ்த்துப் பாக்கள்படித்தனர். செல்வி ப. றெஜீனு ஞானப்பூச்செண்டு வழங்கினுள். செல்வி க. பிலோமினுவால் யூபிலி வாழ்த்துப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. அதன்மேல் யூபிலிநாயகர் தங்கள்பாடசாலைக்கும், தங்கள் கோயிலுக்கும் [illegible] பற்றிச் செல்வன் மா. பேரின்பத்[illegible]வரால் ஆங்கிலத்திலும், செல்வி தொ. செபரத்தினம்என்னும் மாணவியால் தமிழிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

ஈற்றில், யூபிலிநாயகர்எழுந்து தமக்குஅருளப்பட்ட உபசாரணைக்கும், பாராட்டுரைகளுக்கும் நன்றிதெரிவித்துப் பலபுத்திமதிகள் கூறினுர். அதன்மேல் பாடசாலைத் தலைமைஆசிரியரின் நன்றியுரையுடனும், யூபிலிநாயகரின் திருக்கரஆசியுடனும் விழா இனிதே முடிவெய்தியது. சுபம்.

—நிருபர்.

---

# கத்தோலிக்க திருச்சபையும்......

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

மாட்டோம், தகர்ப்போம், தரைமட்டமாக்குவோம். திருச்சபையைஎதிர்த்த எல்லோருமே மண்ணைக்கவ்வி விட்டனர். இவர்களுடைய எதிர்ப்பு எமக்குத் தூசிக்குச்சமானம். கம்யூனிஸத்தை இந்தஉலகத்திலிருந்தே ஒழித்துக் கட்டக்கூடியசக்தி கத்தோலிக்க திருச்சபைக்கு மாத்திரந்தானுண்டு. இதைக் கம்மிகள் உணருகின்றனர். உண்மையைஉணரும்போது உடம்பெல்லாம் எரிவெடுக்கிறது.

ஏழைகளை இரட்சிக்க வந்ததாக ஓலமிடுகிறுர்களே இந்தக்கம்மிகள். ஏழ்மையை இவர்கள் எங்காவது இல்லாமல்பண்ணியதுண்டா? முதலாளிகளை ஒழிப்போம்என்று இத்தனை வருடங்களாகச் சொல்லிக்கொண்டிருக்கிறுர்களே. ஆனுல், இன்னும் முதலாளிகளை இவர்களால் ஒழிக்கமுடியவில்லை. இதற்குமாருகத் தாங்களே முதலாளிகளாகமாறி ஏழைகளைச் சுரண்டுகிறுர்கள். கம்யூனிஸத்தைத் தழுவியவன்கதி நெருப்பைத் தழுவியவனின் கதியையொத்தது. கம்யூனிஸத்தால் ஏழ்மையை ஒழிக்க முடியாது, பணக்காரரையும் இல்லாமற்செய்துவிட முடியாது. ஏமாளிஇருக்கும்வரை ஏமாற்றுபவனும் இருப்பான், அல்லது ஏமாற்றுபவன் இருக்கும்வரை ஏமாளியும்இருப்பான். இரண்டில் ஒன்றையேனும் ஒழிக்க இவர்கள் திரும்பப்பிறக்கவேண்டும். இயற்கையை வெற்றிகொள்ளமுயன்று காலத்தை விரயமாக்குவதைவிட்டு, இயற்கையின்விளைவுக்கு அர்த்தம்கற்பிக்க முனைவதில் காலத்தைவீணுக்குவதை விடுத்து, பகுத்தறிவின்குரலுக்குச் செவிசாய்த்து, தன்னைப்போல் பிறனையும்நேசித்து, தனக்காகமாத்திரம் வாழாது பிறனுக்காகவும்வாழ்ந்து, அதன்மூலம் நிம்மதியைக் கண்டடையவேண்டும். இத்தகையவாழ்வுக்கு அஸ்திவாரமாகத்திகழ்வது கடவுள்நம்பிக்கை. நமதுதுவக்கமும் முடிவும் அவரே. அவரிடமிருந்து வந்தநாம் அவரிடமேபோய்ச் சேரவேண்டும். இதுவே வாழ்க்கையின் குறிக்கோள்.

இந்தக்குறிக்கோளை உணராது மிருகத்தைப்போல் கிடைப்பதைச் சாப்பிட்டு எதிலும் நாட்டமில்லாது நடமாடும்மனிதனுல் நிம்மதியைக் கண்டடையவேமுடியாது. மனிதனை மாடாகமதிக்கும் கம்யூனிஸம் அவனை ஒருசடப்பொருளுக்குச் சமதையாக வைத்து மடையனுக்குகிறது. திருச்சபையோ மனிதனைமனிதனுக, தெய்வாம்சம்பொருந்திய சகலசிருஷ்களிலும் மேலானசிருஷ்டியாக மதித்து நடத்துகிறது. திருச்சபைக்கும் கம்யூனிஸத்துக்குமுள்ள வித்தியாசம்இதுதான். இந்தவித்தியாசம் இருளுக்கும் ஒளிக்குமுள்ள வித்தியாசத்தைப் போன்றுள்ளது. மனிதன் தன் குறிக்கோளை அறிவதிலிருந்து கம்யூனிஸம் அவன்முன்னே இருளாக நின்றுமறைக்கிறது. மனிதன் தன் குறிக்கோளைக் கண்டடைய ஒளியாகியதிருச்சபை அவனுக்குவழிகாட்டுகிறது. மனிதனைப் படுகுழியில்தள்ளக் கம்யூனிஸம் முயற்சிக்கிறது. அதன் காரணமாகத் திருச்சபை முழுச்சக்தியுடனும் கம்யூனிஸத்தை எதிர்க்கிறது. இப்போது புரிந்துகொள்வார்கள் கம்யூனிஸ்தர்கள், நாம்அவர்களைஎதிர்க்குங்காரணத்தை.

திருச்சபை கர்த்தரின்திருச்சபை. அதைக்களங்கப்படுத்தக் கம்யூனிஸ்தர்களால் முடியவேமுடியாது. திருச்சபையின் போதனைகளுக்கு வேறுஅர்த்தம்கொடுத்து ஊரைஏமாற்றலாம்; திருச்சபை அதிகாரிகளிலே பொய்பல கூறிப் பாரைஏமாற்றலாம். ஆனுல், எல்லோரையும் எக்காளும் ஏமாற்ற முடியாது. அவர்களின்கட்டுரையிலே பரிசுத்தசுவிசேஷத்திலிருந்து திருடப்பட்ட வாக்கியம்ஒன்று காணப்பட்டது. அதைஅப்படியே தருகிறேன். "பணக்காரன் சுவர்க்கத்திற்குப் போவது, ஒட்டகம் குண்டூசியின் துவாரத்திற்குள் நுழைவதுமாதிரிதான்." நான் இதிலிருந்து எந்தஒருஎழுத்தையும் கூட்டவோகுறைக்கவோ இல்லை. ஆனுல், சுவிசேஷவாக்கியத்தை அவர்கள்தான் திரித்துக்கூறியிருக்கிறுர்கள். அந்தவாக்கியத்தைத் திரும்பவும் வாசித்துப்பாருங்கள். குண்டூசிக்குத் துவாரம்உண்டா? சுவிசேஷவாக்கியத்தையே தங்கள்விருப்பம்போல் இப்படிப் பைத்தியத்தனமாகத் திரித்து எழுதுபவர்கள் வேறு என்னதான் செய்யத்துணியமாட்டார்கள்? மேலும் இந்தக்கட்டுரை ஏற்கனவே பலவாரங்களுக்குமுன் அவர்களது ஆங்கிலவெளியீட்டில் வெளிவந்திருந்தது. (அதன் தமிழாக்கமேஇது). அந்தக்கட்டுரைக்கு உடனடியாக மறுப்பெழுதப்பட்டிருந்தது, கத்தோலிக்க ஆங்கில பத்திரிகை "மெஸஞ்ச"ரிலே. கம்யூனிஸ்தர்களின் கூற்றுக்களை மறுத்தஅதே நேரத்தில் அவர்களுடையமுகமூடியையும் கிழித்தெறிந்து, எதிர்ச்சவால் விட்டிருந்தது "மெஸஞ்சர்." இதைக் கண்ணுற்ற கம்யூனிஸ்தர்கள் வாய் திறக்கமுடியாது மௌனமடைந்துவிட்டனர். இந்தமௌனம் தங்களதுகுற்றங்களை அவர்கள் ஒப்புக்கொண்டதையே காட்டுகிறது. குற்றச்சாட்டுகளை மறுக்கத் திறனில்லாத சில்லுண்டிகள் தங்கள்கற்பனைக்கதையை மொழிபெயர்த்து வெளியிட்டு, மேலும்சிலரை ஏமாற்றுவதின்மூலமாவது திருப்திஅடையலாமென்ற எண்ணத்தில்தான் கட்டுரையைப் பிரசுரித்திருக்கின்றனர். இதை நாம் அலட்சியப்படுத்தி யிருக்கலாம். ஆனுல், அவர்களதுதகிடுதத்தங்களை வாசகர்கள்அறியச்செய்ய அந்தக்கட்டுரை ஒருசந்தர்ப்பம் அளித்துள்ளதாகக்கருதியே இதைஎழுதியிருக்கின்றேன்.

---

● இத்தாலியஜனதிபதி குறெஞ்ஜி அவர்களின் விருந்தாடியாகப் பிரான்ஸிய ஜனதிபதியான ஜெனறல்சாள்ஸ் தேகோல்அவர்கள் அதிகாரபூர்வமாக இத்தாலிக்கு விஜயஞ்செய்யும்போது அருளப்பபாப்பரசரால் பேட்டியருளப்படுவார். இந்தப்பேட்டி நிகழும்ஆனிமாதம் 27-ந்திகதியன்று அருளப்படுமெனத் தற்போது தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

● தங்கள் சுதந்திரத்திற்காகப் போராடிக்கொண்டிருக்கும் தீபேத்தியர்களுக்காக மிலான் நகரிலே அர்ச். கொதாட்டின்கோவிலிலே இருபூசைகள் நிறைவேற்றப்பட்டன. வண. அன்ட்று ரிசியென் சுவாமியாராலும், முன்னர் தீபேத்தில் ஓர்மிஷனரியாயிருந்த வண. ஜியுசிப்பி ரொஸ்கானு சுவாமியாராலும் இந்தப்பூசைகள் ஏககாலத்தில் நிறைவேறின. இவ்விருவரும் சீனர்களாவர்.

"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



அருமைச் சகோதரங்களே !

எமது பாடசாலைகளைக் காப்பாற்றும்படி திருஇருதயநாதரை மன்றாடினோம். இது உங்களுக்கு ஞாபகமிருக்கும்.

அதேபோன்ற போராட்டத்தில் கேரளமக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அங்கு ஆட்சிசெய்யும் அதிகாரிகள் பள்ளிக்கூடங்களைத் தங்களின் பூரணஆதிக்கத்தில் கொண்டுவந்து சிறுவரை நாத்திகராக்கும் தீவினையில் ஈடுபடுகிறார்கள்.

இவர்களது முயற்சியைக் காங்கிரஸ், முஸ்லீம், நாயர், கத்தோலிக்கர் எதிர்த்து நிற்கிறார்கள். நேரடிநடபடிக்கைகளில் இறங்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுவிட்டது. சிலர் உயிர்துறக்கின்றனர்; பலர்துன்பத்துக்குள்ளாகின்றனர். இந்தியப்பிரதமரும்கூட இதையிட்டுக் கவலைப்படுகின்றார்.

கேரளமக்களின்போர் எமது போரெனமதித்து, அவர்களின் உரிமை பறிபோகாமல் பாதுகாக்கப்பட நாம் உதவ வேண்டும். பணத்தினால் உதவாவிடினும் செபப்பலத்தினால் உதவவேண்டும். அவர்களுடைய தியாகத்துடன் நம்முடைய பரித்தியாகமுஞ் சேர வேண்டும். அவர்கள் உயிர்ப்பலிகொடுக்க உறுதிமனம்கொள்வதற்கு எமது திருப்பலி துணைதரவேண்டும்.

அண்ணா.

—(⌓)—

## —: அன்புள்ளம் :—

— "ஜெயம்" —

1. அன்பினைத் தேடித் தவங்கிடந்தே—பெற்ற
அன்னையின் பாதம் தனிற்கிடந்தேன்
என்பினையும் பிறர்க் கர்ப்பணித்தேன்—அதை
எள்ளள வாகினும் கண்டிலனே.

2. அன்பர்கள் என்றெனை அண்டிவந்தோர்—நிதம்
ஆறுக் கவலையே தந்தகன்றார்
நன்மனத் தோரென எண்ணிவந்தேன்—எனை
நட்டாற்றி லேவிட்டுச் சென்றகன்றார்.

3. அன்பினில் இன்பம் அடைந்திடுவோம்—என
ஆவ லுடன்நான் அலைந்தலுத்தேன்
துன்பச் சுமையன்றி மேதினியில்—அன்பு
சொட் டளவேனும் கிடைத்தறியேன்.

4. பாரினிலே உண்மை அன்பினையே—தேடிப்
பட்ட துயரக் கொடுமைகளைத்
தீருமென்றே பெருந் தாகமுடன்—யேசு
தேவன் மலர்ப்பதம் தேடிச்சென்றேன்.

5. "என்மகனே ! இதோ ! அன்பினுள்ளம்—பெறு"
என்றனர், உள்ளம் சிலிர்த்ததம்மா !
கண்களில் ஆனந்த நீர்பெருகச்—சாந்தி
கண்டனன், கண்டனன், கண்டனம்மா !

—(⌓)—

## கடற்கரையில் ஞானஸ்நானம்

மாலைவேளை; கதிரவன் தன்ஒளிக் கிரணங்களைப் பரப்பிக்கொண்டிருந்தான் சன்பிரான்சிஸ்கோவில். ஷேர்லி ஒனீலும், 18வயது மாணவன் அல்பேட் கோகிளரும் நீச்சலாடச் சென்றனர் கோல்டின்கேட் பாலத்தருகில்.

"கரையிலிருந்து 50யார்தூரத்தில் நீந்திவிளையாடும்பொழுது அல்பேட் சத்தமிட்டான். நான் திரும்பிப் பார்த்தேன்," பின் ஷேர்லி கூறினாள்; "மங்கல்நிறமான ஏதோ ஒன்று தண்ணீருக்குமேல் அடித்தது. அது வாலோ, இறகோ தெரியவில்லை. ஏதோ மீன் என்று தெரிந்தது. தண்ணீர் நன்றாய் அடிபட்டது." அவர் திரும்பவும் சத்தமிட்டார், "அது ஒரு சுறா; இவ்விடம் விட்டுப் போ."

நடப்பதைப் பட்டாளக்காவல் கட்டடத்திலிருந்து பார்த்துக் கொண்டு நின்றான் சார்ஜெட் லியோடேய். "நுரை நிறைந்து சிவந்துபோன தண்ணீரிலிருந்து கொண்டு யாரோ ஒருவருக்கு, 'திரும்பிப்போ; திரும்பிப்போ' என அவன் சத்தம் போடுவதைக் கேட்டேன். அப்பெண் அவனுடைய எச்சரிக்கையைக் கவனியாமல் அவனை நோக்கி நீந்திப்போகக் கண்டேன். நான் கண்டவைகளில் இதுவே அதிசிறந்த வீரச்செயல்."

ஷேர்லி அல்பேட் அருகே சென்று கையைப் பிடித்தாள். ஆனால், அவரை இழுத்தபொழுது கை ஒரு சிறு இழையில்தான் தூங்குகிறதென அறிந்தேன். அவனை ஒரு கையால் பிடித்துக் கொண்டு கரையை நோக்கி நீந்தினாள். தூண்டிற்காரனொருவன் தன் கயிற்றை எறிய அதைப் பிடித்துக் கரையை அடைந்தனர்.

அடைந்ததும் கத்தோலிக்க சமயத்தினளான ஷேர்லி சமயசார்பற்ற அல்பேட்டின் தலையில் கடல்தண்ணீரை வார்த்து, "பிதாவுடையவும் ........., நான் உன்னைக் கழுவுகிறேன்" என்றாள். பின் "சரியா?" என அவனைக் கேட்க, அவன் "எல்லாம் சரி" எனச் சிறு குரலில் கூறினான். தன்னுடன் உத்தமமனஸ்தாப செபத்தைச் சொல்லுவித்தாள்.

அல்பேட் அறிவு கெட்டுப்போகுமுன் "நான் கடவுளை நேசிக்கிறேன்; என் அம்மாவை நேசிக்கிறேன்; பப்பாவை நேசிக்கிறேன்; கடவுளே எனக்கு உதவி செய்யும்" எனக் கூறினான். இருமணித்தியாலங்களின்பின் வைத்தியசாலையில் இறந்தான்.

## ஒத்திகை

— எஸ். எல். சவுந்தரநாயகம் —

[தொடர்ச்சி]

"ஆளைக்கொல்லும் துப்பாக்கி உங்களிடம் இருக்கிறதா அப்பா?" என்று கேட்டேன். அவர் 'ஆம்' என்று பதிலளித்தார். (எனது தந்தை சொந்தத்தில் துப்பறியும் தொழில்நடத்திவந்ததால், அவரிடம் ஆட்களைக் கொல்லும் கைத்துப்பாக்கி இருந்ததென்பதும் உண்மைதான்.)

அன்றுதொட்டு அந்தமாதிரி ஒரு ஒத்திகைநடத்திக் கைத்துப்பாக்கியினால் சுட்டுவிளையாட வேண்டுமென்பது எனது தணியாத தாகமாயிருந்தது. எப்படித் துருவியாராய்ந்து தேடியும் அப்பா துப்பாக்கிவைக்குமிடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனாலும், விடவில்லை. துப்பாக்கி என்கையில் கிடைக்கும்நாளை ஆவலுடன் எதிர்பார்த்தவாறிருந்தேன்.

ஒருநாள் அப்பா தன் மேசைலாச்சியைப் பூட்டாத நிலையில் விட்டுவிட்டு எங்கோ தூரஇடத்திற்குச் சென்றிருந்தார். இதுதான் தக்க சந்தர்ப்பம் எனஎண்ணி லாச்சியை இழுத்துப்பார்த்தேன். அதற்குள் அப்பாவின் கைத்துப்பாக்கி இருந்தது.

உடனே ஓடோடிச்சென்று என் நண்பன் ஆனந்தனை அழைத்துவந்து விபரத்தைக்கூறி என்னைப் பேசும்படி சொன்னேன். ஆனந்தன் பேசினான். நானும் பேசினேன். பிற்பாடு இருவரும் அடித்துக் கொண்டோம். முடிவில் முன்திட்டமிட்டபடி நான் மறைத்துவைத்திருந்த கைத்துப்பாக்கியைஎடுத்து ஆனந்தனைச்சுட்டுவிட்டேன். ஆனந்தன் நல்லமுறையாக நிலத்தில்விழுந்து இறந்துபோனான். ஒத்திகை நன்றாயமைந்துவிட்டது. நடிப்பின் உச்சநிலையை இருவரும் பிடித்துவிட்டோம். அதிலும் ஆனந்தனின் நடிப்போ அபாரம்.

ஆனால், நான் சொல்லிவைத்தபடி ஆனந்தன்எழுந்திருக்கவில்லை. "இனி நடிப்புப் போதுமடா எழுந்திரு!" என்று ஆனந்தனைத் தூக்கினேன். ஆனந்தனாவது — எழுந்திருக்கிறதாவது? அவன் உண்மையிலேயே இறந்துவிட்டான். அப்பொழுதுதான் நான்சுட்டது அப்பாவுடைய ஆளைக்கொல்லும் கைத்துப்பாக்கி என்று தெரியவந்தது.

பயங்கரத்தால் செய்வதறியாது திகைத்தேன். உரத்த சத்தமாக அழுதேன். அக்கம்பக்கத்திலுள்ளவர்களெல்லாரும் ஓடிவந்தார்கள். அவர்கள் வருவதைக்கண்டு நான் ஓட்டம்பிடித்தேன். ஓடும்பொழுது கால்இடறி நிலத்திற் குப்புறவீழ்ந்தேன். யாராவது என்னைத்துரத்தி வருகிறார்களாவென்று பார்ப்பதற்காகத் தலையைநிமிர்த்திக் கூர்ந்து நோக்கினேன்.

அதிசயத்திலும் அதிசயம்! கட்டிலிற் படுத்திருந்தநான் தரையில் அழுதுகொண்டு கிடந்தேன். என் தாய் தந்தையரெழுந்து பரபரப்புடன் 'என்ன, என்ன' வென்றுவிசாரித்தனர். நான், "ஆனந்தனைச் சுட்டுவிட்டேன்; ஆனந்தனைக் கொன்றுவிட்டேன். ஐயோ! ஐயோ!" என்று அலறினேன். அவர்கள் என்னை அரவணைத்தபடி, "நீ பயப்படாதே தம்பி! நீ ஆனந்தனைச் சுடவில்லை. அப்படிக் கனவுகண்டிருக்கிறாய்" என்று என்னைத் தேற்றினர்.

நான் அப்படிப் பயங்கரமானகனவு கண்டதற்குக் காரணமென்னவென்று அப்பாவிடம்அம்மாவிசாரித்தாள். அப்பா என்முன்னிலையில் தான்நடத்திய ஒத்திகைபற்றிக்கூறி, அதுதான் கனவுக்குக் காரணமென்று சொன்னார்.

"நீங்கள் அவன்முன்னிலையில் அப்படியான கொலைக்காட்சியை ஒத்திகை நடத்திக் காட்டியது தவறு. உண்மைக் காட்சிகளின் மூலமோ, அல்லது கொலை, கொள்ளை, ஆபாசக் காட்சிகள்நிறைந்தநாடகம், சினிமா, பத்திரிகைகள் மூலமோ சிறுவர்களின் மனதில் தீயகாட்சிகள் பதிவதும், சமுதாயத்தில் குற்றம்பெருகுவதும் தீமைக்கு ஒருமுக்கிய காரணமல்லவா? இது விஷயத்தில் பெரியவர்களாகியநாம் மிகவும் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்" என்று அப்பாவை அம்மா கடிந்துகொண்டாள். அன்றுடன் கைத்துப்பாக்கி சுட்டு விளையாட வேண்டுமென்ற என் ஆசையும் பறந்தது.

இவ்வாறு அவர் கதையைக்கூறி முடித்தார். "சரி இந்தக்கதை சிறுவர்களுக்கு என்ன போதனையைப் புகட்டுகிறது?" என்று அவரிடம் கேட்டேன்.

"சிறுவர்கள் எந்தஒரு புதுக்காரியத்திலும் ஈடுபடும்பொழுது பெரியவர்களின் உத்தரவின்றி ஈடுபடக்கூடாது" என்பதைத்தான் இக்கதை சிறுவர்களுக்குப் புகட்டுகிறது என்று அவர் பதில்சொன்னார்.

எனக்கொரு கதையெழுத உதவி புரிந்த அந்தமனிதரை மனோவாக்குக்காயங்களால் நன்றிதெரிவித்து வழியனுப்பி வைத்தேன்.

---

## அர்ச். பத்திரிசியார்

இவர் சிறுபிள்ளையாய் இருக்கும்போது மூன்றுவிசை கடற்கள்ளரால் பிடிபட்டார். பிடிபட்டு அவர் ஆடுமாடுகளை மேய்த்து வந்தார். அவர் வேலைசெய்யும்போது அடிக்கடி செபம்செய்து, தம்மேல் அநேக முறை சிலுவைவரைந்துகொள்வார். இவர் அர்ச். பாப்பானவருடைய அனுமதியின்மேல் மேற்றிராணியாராக அபிஷேகஞ் செய்யப்பெற்று அயர்லாந்து தேசத்துக்குப்போய் அங்கு போதித்தார். இவருடைய பக்தியுள்ள செபத்தாலும், கடுந்தபத்தாலும், உருக்கமுள்ள பிரசங்கத்தாலும் அரசர்களும், கணக்கற்ற சனங்களும் சத்தியவேதத்தைத் தழுவிக் கொண்டார்கள். அங்கு இவர் கன்னியர்மடமும், சன்னியாசர்மடமும் கட்டிவைத்தார். அஞ்ஞானத்தில் மூழ்கியிருந்த அயர்லாந்தை இவர் உத்தம கிறீஸ்துவதேயமாக்கி, முதிர்ந்த பராயத்தில் மரணமானார்.

எஸ். பற்றிக் வின்ஸ்ரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேகவியோகம்

கரம்பன் பதியைப் பிறப்பிடமாகக் கொண்ட சூசைப்பிள்ளை மரியநாயகம் என்பவரின் பிரியமனைவியும், நாரந்தனையைச்சேர்ந்த பிரபலவியாபாரியான நீக்கிலாப்பிள்ளை சுவாம்பிள்ளை என்பவரின் சிரேஷ்டபுதல்வியும், கொட்டாஞ்சேனை, நல்லாயன் கன்னியர்மடத்தில் ஆசிரியையாகத் தொண்டாற்றி வந்தவருமான வயலெற் மேரிஸ்ரெல்லா என்பவ பிரவசநோய்காரணமாகச் சென்ற வைகாசிமாதம் 25-ந்திகதி அந்திய தேவதிரவிய அனுமானங்களைப்பெற்று, படைத்தோன்கரத்தில் மாணநித்திரையானா. அவவின் சடலமானது அடுத்த நாட்காலை ஜனனபதியாகிய நாரந்தனையில் வண. அந்தோனிப்பிள்ளை, வண. நல்லையா ஆகிய குரவர்கள்சகிதம் துக்க கீதம் பாடிச்செல்ல, ஊர்வலமாகச் சேமக்காலை கொண்டுசெல்லப் பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

அவவுடைய ஆன்மா நித்தியஇளைப்பாற்றியடைய இறைவனைப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் விநயமாக வேண்டுகிறோம்.

அவவைப்பிரிந்து துன்புறும்

கணவன்: எஸ். மரியநாயகம்.
தந்தை: என். சுவாம்பிள்ளை.
தாயார்: சவினா.
சகோதரி: சாளெற்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1254**

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

கோப்பாய் வடக்கு
சினியர் கந்தையா — வழக்காளி.
எதிராக
நீர்வேலி
1. வினயர் பொன்னுத்துரையும்,
2. பெண் இரத்தினமும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1254-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1959-ம் ஆண்டு ஆடிமாதம் 28-ந்திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணி தொடக்கம் அக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 755. இன்னும் ரூபா 500-க்கு 28-9-56 தொடக்கம், 20-12-56 வரையும் 100-க்கு (6%) ஆறுவீதவட்டியும், பின்பு கூட்டுத் தொகைக்கு இறுபடும்வரைக்கும் 100-க்கு (5%) ஐந்துவீதவட்டியும், கோட்டுச் செலவு 169ரூபா 25சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம்டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய்க் கோயிற்பற்று, நீர்வேலிஇறை "மங்களவத்தையும், மங்களவத்தைத் தோட்டமும்" பர. நில. இலா. 4. வீடு, செய்பயிர், வான்பயிர்களும், பனைகளும், இக்காணிக்குள் இருக்கும்கிணற்றில் பங்கும், எல்லைகளில் நிற்கும் வான்பயிர்ப்பங்கும், மேற்கேயிருக்கும் ஒழுங்கையிலிருந்து மேற்கு எல்லைக்காணியின் வடக்கு எல்லை ஓரமாக இக்காணியில் இருந்து இக்காணிக்குப் போக்குவரத்துக்கு விடப்பட்ட 6முழஅகலங்கொண்ட ஒழுங்கைப் பாவிப்புஉரித்தும். இதற்கு எல்லை: கிழக்கு— கார்த்திகேசு பென் பொன்னம்மாவின் ஆதனம். வடக்கு— ஐயாத்துரை பெண் சின்னத்தங்கத்துக்கும், துரையப்பா பெண் செல்லமுத்துவுக்கும் உரிய ஆதனங்கள். மேற்கு— ஒழுங்கை முகப்பும், சின்னத்தம்பி பெண் தெய்வானைக்குரிய ஆதனமும். தெற்கு— கந்தையா பெண் செல்லமுத்துவின் ஆதனம். இதடங்கலில் இக்காணிக்குள் இருக்கும் கிணற்றில் மேற்கு எல்லைக்காணிக்குரிய பங்கும், வழிவாய்க்கால் பாவிப்பு உரித்தும் பிறநீங்கலாக மிகுதியடங்கலும்.

K 146/131-ல் பதிவு.

ஆர். கனகரத்தினம்,
கொம்மிஷனர்.

10-6-59

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 27-ந் திகதி சனிவாரம் பி. ப. 4மணியளவில் அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில் நடைபெறும். பகுதித்தலைவர்மார் சங்கம் சரியாய் பி. ப. 3-30மணிக்கு நடக்குமாதலால் பகுதித்தலைவர்கள் நேரகாலத்தோடு சமுகங்கொடுக்குமாறு தயவாய்க் கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள்.

**A. S. Francis of Mary,**
தலைவர்.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2340**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

யாழ்ப்பாணம், 2-ம்குறுக்குத்தெரு
1. V. கந்தப்பர் சுப்பிரமணியமும்,
2. பெண் சிவபாக்கியலெட்சுமியும்
— வழங்காளிகள்.
எதிராக
மண்டைதீவு
செல்லத்தம்பி கந்தசாமி தனக்காகவும், தனது பெண் ஈஸ்வரியின் ஆதனப் பிரதியாகவும்.
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2340-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் மூன்றுதுண்டுக் காணிகளை 1959-ம்ஆண்டு ஆவணிமாதம் 19-ந்திகதி புதன்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தந்தக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 3,966-உம், இன்னும் ரூபா 2,000-த்திற்குப் 18-7-58 தொடக்கம், 6-10-58வரையும் 100-க்குப் 10%வட்டியும் பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரையும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 370ரூபா 28சதமும். இதில் 289 ரூபா 49சதம் கொடுபட்டது.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தீவுப்பகுதி அல்லைப்பிட்டி கோயிற்பற்று, மண்டைதீவுஇறை "ஊரிவயல்" பர. நெற். இலா 13 (ப. நெ. இ. பதின்மூன்று). எல்லை: கிழக்கு — றோட்டு. வடக்கு — ஆறுமுகம் தம்பையாவுடைய ஆதனம். மேற்கு— மருதையினர் சுப்பையாவுடைய ஆதனம். தெற்கு — வெற்றிவேலு நாகநாதியுடைய ஆதனம். இது அடங்கலும்.

பதிவு இலக்கம் C. 177/240.

2. ஷை இறை "குளக்கட்டு வயல்" பர. நில. இலா 20 குளி $7\frac{5}{8}$. தென்னை மரங்களும், மாமரங்களும், கிணறும். எல்லை: கிழக்கு — சிவஞானசுந்தரம் பெண் அன்னபூபதிக்கும், நல்லதம்பி கணபதிப்பிள்ளைக்கும் உரியஆதனங்கள். வடக்கு — சின்னத்தம்பி கணபதிப்பிள்ளைக்கும், இளையகுட்டி ஞானரெத்தினத்துக்குமுரிய ஆதனங்கள், மேற்கு— சுப்பிரமணியம் கைம்பெண் தில்லைநாயகிக்குரிய ஆதனமும், றோட்டும். தெற்கு— குமரபெருமான் கனகசுந்தரத்துக்கும், கார்த்திகேசு முத்துச்குமாருவுக்கும், கணபதிப்பிள்ளை பெண் உம்மையாத்தைக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலிற் சொரியலாய் ஆறில் ஒருபங்கும், ($\frac{1}{6}$பங்கு) அதற்குச் சேர்ந்தவைகளும்.

3. ஷை இறை "முல்லையடி" பர. நில. இலா. இரண்டரையும், (ப. நி. இ. $2\frac{1}{2}$) பனைமரம், தென்னைமரங்கள். எல்லை: கிழக்கு — றோட்டு. வடக்கு — கார்த்திகேசு முத்துக்குமாருவுடைய ஆதனம். மேற்கு —கோவில் (Church Mission) உரியஆதனம். தெற்கு— சுப்பிரமணியர் கணபதிப்பிள்ளைக்குரிய ஆதனம். இதடங்கலும். காணிக்கந்தோரில் பதிவுஇலக்கம் C. 117|291.

தி. ந. ஆசீர்வாதம்,
கொம்மிஷனர்.

நம். 21, 2-ம்குறுக்குத்தெரு,
குருநகர், யாழ்ப்பாணம்.
15-6-59.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1949**

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

வண்ணார்பண்ணை கிழக்கு
செல்லப்பா சோமசுந்தரம்
— வழக்காளி.
எதிராக
வண்ணார்பண்ணை கிழக்கு
1. சிவசுப்பிரமணியம் குலேந்திரன்
ஷை ஊர்
2. சிவசுப்பிரமணியம் ஞானேந்திரன்
ஷை ஊர்
3. சிவசுப்பிரமணியம் மகள் தனலெட்சுமி
ஷை ஊர்
4. சுந்தரம்பிள்ளை சிவசுப்பிரமணியமும்,
ஷை ஊர்
5. பெண் வியாகம்மாவும்
1-ம், 2-ம், 3-ம் எதிரிகள் பராயமற்றவர்கள். (சிறுபிள்ளைகள்) அவர்களின் பராபரிப்புத்தத்துவகாரர் 4-ம், 5-ம்எதிரிகள்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1949-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால்விபரிக்கப்படும்இருதுண்டுக்காணிகளை 1959-ம் ஆண்டு ஆடிமாதம் 27-ந்திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3மணிதொடக்கம் அக்காணிகளுக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2,277-50. இன்னும் ரூபா 1,500-க்கு 20-10-58தொடக்கம், 2-12-58வரையும் 6%வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுபடும்வரை 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 303ரூபா 89சதமும்.

### காணிகள் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோயிற்பற்று, வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை "காண்டைக்காடு" பர. நில. இலா. நாலு (4), குளி ஐந்து (5) செய்பயிர்களும், வான்பயிர்களும். இதற்கு எல்லை: கிழக்கு — M. வீரவாகு கனகசபையின் காணி. வடக்கு— கைஒழுங்கையும், வாரித்தம்பி கந்தையாவின் காணியும். மேற்கு — சோமசுந்தரம் பெண் கனகம்மாவின் காணி. தெற்கு— கீழ்விபரிக்கப்படும் ஆதனம். அதி சங்கரப்பிள்ளை சபாபதிக்கும், பெண் அன்னலெட்சுமிக்கும் சமபங்காகப் பாவிக்கவிடப்பட்ட ஒழுங்கை. பதிவு D 189/108.

2. ஷை இறை "காண்டைக்காடு" பதினலரைக்குளி ($14\frac{1}{2}$குளி). எல்லை: கிழக்கு — ஒழுங்கை. வடக்கு— M. V. கனகசபைக்குரிய ஆதனமும், சங்கரப்பிள்ளை சபாபதிக்கும், பெண் அன்னலெட்சுமிக்கும்உரிய மேற்சொல்லிய ஆதனம். மேற்கு— சோமசுந்தரம் பெண் கனகம்மாவுக்குரிய ஆதனம். தெற்கு— சண்முகம் இராசையாவின் காணியும், ஒழுங்கையும். இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி. பதிவு D 254|151.

ஆர். கனகரத்தினம்,
கொம்மிஷனர்.

10-6-59

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எங்கள் குடும்பத்தின் அடைக்கலமும், பாதுகாவலுமாகிய பரிசுத்த சதாசகாய மாதாவிடமும், அர்ச். அந்தோனியார், அர்ச். யூதாததேயு இவர்களிடமும் கேட்டுக்கொண்டபடி என்மகன் எஸ். எஸ். சி. பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். இவர்களின்மகிமை பூவுலகெங்கும் பரவ நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

மாதாவின் அடியாள்.

**இறைவன் எமது உள்ளத்தில் இன்றேல், எமது பகல் இரவாகும்; அவர் இருப்பரேல் எமது இரவு எல்லாம் பகல்.** —அர்ச். பிரான்சிஸ் சேல்ஸ்

## சயரோக நிவாரணம்

### ஒவ்வொருவரும் அறியவேண்டியன

1. சயரோகத்தைத் தடைசெய்ய முடியும்.

2. சயரோகம் ஓர்பரம்பரைவியாதி அல்ல. பிறப்பிலேயே ஒருவருக்குச் சயரோகம் ஏற்படுவதில்லை.

3. கண்ணுக்குத் தெரியாத ஒரு கிருமியே இந்தநோயை உண்டாக்குகிறது. இதற்கு "ருயூபெக்கிள் பக்கிலுஸ்" என்று பெயர்.

4. சயரோகத்தால் பீடிக்கப்பட்ட ஒருநோயாளியின் மூச்சுப்பைகளிலும், துப்பலிலும் இலட்சக்கணக்கிலே இக்கிருமிகள் காணப்படுகின்றன.

5. இந்நோய் மக்களிடையே எவ்வாறு பரவுகிறது?

(அ) சயரோகமுள்ளவரின் துப்பல் காய்ந்துதூசியாகக் காற்றில்பறப்பதனால்.

(ஆ) சயரோகமுள்ளவர் இருமும்பொழுது கிருமிகள் தொற்றுவதனால்.

(இ) சயரோகமுள்ள பசுவின் பாலைக் குடிப்பதனால்.

6. பிள்ளைப் பராயத்திலும், வாலிபப் பராயத்திலுமே பொதுவாக இந்நோய் தொற்றுகிறது. தொற்றினாலும் அநேகமாக மக்கள் தங்களிடமுள்ள எதிர்ப்புச்சக்தியால் இந்நோயை வெல்கின்றனர். இலங்கையில் வாலிபப் பராயமுள்ளவர்களிலே 60 முதல் 70 பேர் இந்த எதிர்ப்புச்சக்தியின் பலனாக ஓரளவிற்கு நோய் தாக்கமுடியாத வலுவைப் பெறுகின்றனர்.

7. எனவே, இலங்கையிலுள்ள ஒவ்வொரு குடும்பங்களிலும் இரண்டொருவருக்காவது இந்நோய் தொற்றவில்லையென்று சொல்லமுடியாது. சிலகுடும்பங்களைமாத்திரமே இந்நோய் தாக்குகிறதுஎன்றஎண்ணம் தவறானது. இவ்வெண்ணத்தை நாம் சமுதாயத்தினின்றும் களைந்தெடுத்தல் வேண்டும்.

8. ஆரம்பகாலத்திலேயே வைத்தியபரிசோதனை செய்தல் பிரதானமானது. நடக்கும்பொழுது மூச்சுவிடவில்லங்கம் ஏற்படுதலும், சீக்கிரம் களைப்பு ஏற்படுதலும், பசியின்மையும், நிறை குறைதலும், தொடர்ந்துநிற்கும் காய்ச்சல் அல்லது இருமலும், நெஞ்சு நோவும், துப்பலில் இரத்தக்கறை காணப்படுதலும் இந்நோயின் அறிகுறிகளாகும்.

9. சிறிது சந்தேகம் இருப்பினும் வைத்தியருக்குக் காட்டி மார்பை "எக்ஸ்றே" படம் பிடித்துக்கொள்ள வேண்டும். இது மிகவும் சுலபமான வேலை. இதுவே சுகவழி.

10. இந்தநோயை மறைத்துவைத்திருப்பது மிகவும் மூடத்தனமாகும். இது நோயாளிக்குத் தீங்கை உண்டுபண்ணிக் குடும்பத்திலுள்ள பிள்ளைகுட்டிகட்கும் நோயைத் தொற்றச் செய்யும்.

11. சயரோகம் தீராத நோயல்ல. ஆரம்பத்தில் சிகிச்சைசெய்தால் சீக்கிரம் குணமடையும். வருத்தம்முற்றிய பிறகும் நவீன வைத்தியசிகிச்சைமூலம் குணப்படுத்தலாம். ஆனால், பலநாட்களுக்கு வைத்தியஞ்செய்யவேண்டும்.

12. இலங்கைச் சயரோகநிவாரண தேசியசங்க காரியதரிசிக்கு எழுதி வேண்டிய உதவிகளையும், ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளலாம். உங்கள் பகுதியிலுள்ள கிளைச்சங்கத்திற்காவது, கௌரவ காரியதரிசி, இலங்கைச் சயரோக நிவாரணசங்கம், கொழும்பு என்ற விலாசத்திற்காவது எழுதிக் கொள்ளலாம்.

கிட்டத்தட்ட வருடாவருடம் 10,000 மக்கள் சயரோகத்தால் மரணமடைகின்றனர் என்பதை அறிவீர்களா? இத்தொகையில் அநேகமானோர் இளம்பராயத்தி லுள்ளவர்களே. இவர்களில் எத்தனையோபேரைக் காப்பாற்றலாம்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 18-1959.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org